# சிராத்த தீபிகை



அச்சுவேலி

சிவஸ்ரீ ச. குமாரசுவாமிக்குருக்கள்

1959

உ

சிவமயம்.

# சிராத்த தீபிகை

அச்சுவேலி

சிவஸ்ரீ ச. குமாரசுவாமிக்குருக்கள்

எழுதியது

*

சென்னை


வித்தியாநுபாலன அச்சுயந்திரசாலையில்

பதிப்பிக்கப்பட்டது.

முதல் பதிப்பு 1933.
2-ம் பதிப்பு 1000.
விகாரி௵, வைகாசி௴.
1959௵, ஜூன்௴.

விலை [illegible] 60

வித்தியாநுபாலன அச்சகம்,
நெ. 300, தங்கசாலைத் தெரு, சென்னை-1.



சிவஸ்ரீ ச. குமாரசுவாமிக் குருக்கள்.

# பொருளடக்கம்.


| | | பக்கம். |
|---|---|---|
| 1. | தீக்ஷை | 1 |
| 2. | ஆசாரத்தில்வழுவியவர்கள் | ,, |
| 3. | கோதானுதி | 2 |
| 4. | அந்தியேட்டி | ,, |
| 5. | தகனுதிகளுக்கு அதிகாரிகள் | 3 |
| 6. | அத்திசஞ்சயனம் | 4 |
| 7. | நக்கினப்பிரச்சாதனம் | 5 |
| 8. | பாஷாணத்தாபனம் | 6 |
| 9. | ஏகோத்தரவிருத்தி | ,, |
| 10. | பிண்டதானம் | ,, |
| 11. | நவச்சிராத்தம் | ,, |
| 12. | பாஷாண உத்தாபனம் | 7 |
| 13. | சங்கிதா சிராத்தம் | ,, |
| 14. | இடபோத் சர்ச்சனம் | ,, |
| 15. | ஏகோத்திட்டம்—மாசிகம் | ,, |
| 16. | சோதகும்ப சிராத்தம் | ,, |
| 17. | சபிண்டீகரணம் | 9 |
| 18. | மாசிக சிராத்தம் | ,, |
| 19. | சிராத்தம் | 10 |
| 20. | அபரக்கிரியையின் அவசியம் | 11 |
| 21. | பிதிர்தேவர்கள் | 19 |
| 22. | சமபி—புத்திரர்—சாதகர் | 22 |
| 23. | சிராத்தவகைகள் | ,, |
| 24. | சாந்தி என்னும் விருத்தி சிராத்தம் | 25 |

| | | பக்கம். |
|---|---|---|
| 25. | கயா சிராத்தம் .... .... | 26 |
| 26. | அமாவாசைச் சிராத்தம் .... .... | 27 |
| 27. | சிராத்தவகை தொண்ணூற்றாறு .... | ,, |
| 28. | பஞ்சமகாயஞ்ஞம் .... .... | 28 |
| 29. | இன்னா இன்னாருக்கு இன்ன கிரியை என்பது | 29 |
| 30. | ஆமசிராத்தம் .... .... .... | 30 |
| 31. | பொருள் இல்லாதவர் .... .... | ,, |
| 32. | சிராத்தஞ் செய்யுமிடம் .... .... | 31 |
| 33. | காலம் .... .... .... | ,, |
| 34. | சிராத்ததினத்தில் செய்யத்தக்கவைகள் .... | 32 |
| 35. | செய்யத்தகாத கருமங்கள் .... .... | ,, |
| 36. | பாகஞ் செய்பவர்கள் .... .... | 33 |
| 37. | சிராத்தத்துக்குரிய திரவியங்கள் .... | ,, |
| 38. | ஆகாத திரவியங்கள் .... .... | 34 |
| 39. | பத்திரபுஷ்பங்கள் .... .... | ,, |
| 40. | ஆசௌசம்வரின் செய்யும்விதி .... | ,, |
| 41. | செய்யும்விதி .... .... .... | ,, |
| 42. | சற்பாத்திரர் .... .... .... | 35 |
| 43. | அசற்பாத்திரர் .... .... .... | 36 |
| 44. | சிராத்தயோக்கியரை நியமித்தல் .... | ,, |
| 45. | அக்கினிவழிபாடு .... .... | 37 |
| 46. | பூசை .... .... .... | 39 |
| 47. | பிண்டம் .... .... .... | 40 |
| 48. | தருப்பணம் .... .... .... | 41 |
| 49. | வேதமோதுதல் .... .... | ,, |
| 50. | தக்ஷிணை .... .... .... | 42 |
| 1. | போசனம் .... .... .... | ,, |

உ

சிவமயம்.

# சிறப்புப்பாயிரம்

புலோலி ஆரியதிராவிட மஹாபண்டிதர்

**பிரமஸ்ரீ ம. முத்துகுமாரசுவாமிக் குருக்கள்** அவர்கள்

சொல்லியது.

உத்தமசற் குணநிலய னுயர்சீரச்சு வேலியில்வாழ்
வித்தகன்வே தாகமமுன் விளம்புபல கலைதெளிந்த
சித்தகுமார சுவாமிகுரு சிறந்தசிராத்த தீபிகையைப்
புத்தமுதிங் கிதுவென்னப் புகட்டினனிவ் வவனியர்க்கே.

---

மகாவித்துவான்

**பிரமஸ்ரீ சி. கணேசையர்** அவர்கள்

இயற்றியது.

சிவநெறியி லொழுகியிடு மக்களெலாஞ் சிராத்தமுறை
செவ்வே செய்து
பவநெறியை நீக்கியுயர் மேற்கதியிற் சென்றின்பம்
பற்று மாறே
இவையிவைகள் செயத்தக்க தெனவிளக்கி விதிபலவு
மெடுத்துக் காட்டி
நவமுறவோர் சிராத்ததீ பிகையெனுநூல் செய்தளித்தா
னவன்போ னாடின். (1)

பழனவயல் சூழச்சு வேலியெனும் பதியுதித்தோன்
பலரு மேத்தும்
அழகுறுநற் குணமமைந்தோன் வேதமொடா கமநூல்க
ளறிந்தோ ரெல்லாந்
தொழுதிடவே விளங்குகின்ற குமாரசுவா மிக்குருப்பேர்
சொல்ல நின்றேன்
வழுவறநல் விருமொழியுங் கற்றுணர்ந்த புலவர்சிகா
மணியா மன்றே. (2)

---

தருமை ஆதீன மகாவித்துவசிகாமணி

சீகாழி

**ஸ்ரீமத் அ. முத்துத்தாண்டவராயபிள்ளை அவர்கள்**

அபிப்பிராயம்.

உலகநிலை பலவகையா நிலவுறுமிக் கலிகாலத்
திண்மை நீத்து
நிலைகலங்கி மாந்தருந்தம் வருணநெறி மிகத்தவறி
நிற்குங் காலைப்
பலகலையும் வலபுலமைப் பாவலர்முன் பகர்முறையிற்
பழுதா காம
விலகுறுநன் மறையோதும் வைதிகமா மரபினிடை
யினிது வந்தே. (1)

சிறந்தமுதற் குலங்குலமாத் திகழ்மறைப் பொருளதனைத்
திறமாய்க் கற்றுப்
பிறந்திடுநா டொடங்கியர னடியிணையை யருச்சித்துப்
பெரிதும் பேணித்

திறந்தருமா கமப்பனுவற் றுறையின்மிகத் தெளிந்துணர்ந்த
செய்தி யாவு
மறந்தவரு தவனியினிப் பெருந்திருவை மேவுறநல்
லறிவை யூட்ட. (2)

நாத்திகத்தைப் போக்கியெங்கு மாத்திகத்தைப் பரப்பிடுவா
நாடு தோறுஞ்
சாத்திரச்சொற் பொழிவைமிக நடத்தியொரு சிவஞானத்
தருமெய்ந் நூலும்
காத்திரத்தை வெறுத்தசிவ ஞானிகடாஞ் சித்திவளர
கத்தி னுண்மை
நேத்திரத்தாற் கண்டுமகிழ் பிராசாத தீபத்து
நிகரி லுரையும். (3)

விருந்துவந்த தெனமகிழ்ந்து பிதிருநந் தமக்காசி
மிகவுங் கூற
இருந்தவிடந் தனிலவர்தங் கருமமியற் றிடுஞ்சைவர்க்
கேற்ற வாறு
திருந்தியநற் சிராத்தவிதி யெனுநூலு மிவ்வுலகிற்
றிரட்டித் தந்தார்
பொருந்துமச்சு வேலிவரு குமாரசா மிப்பெயர்கொள்
புலவ ரேறே. (4)

சூரியனார்கோவிலாதீனம் சித்தாந்த சிகாமணி

இலக்கணம் ஸ்ரீலஸ்ரீ முத்துக்குமாரத் தம்பிரான் சுவாமிகள்

அபிப்பிராயம்.

சிவஞானச் செல்வர்களாகிய குருக்களவர்கட்கு இனிய விஞ்ஞாபனம். தாங்கள் என்பால் அன்புகூர்ந்து அனுப்பிய வெளியீடுகள் பெற்று மகிழ்கின்றேன். ****

தென்புலத்தார் கடன்கொடுக்க விரும்புவார்க்கு உண்மை நெறி காட்டுதற்கும், அதனைவிடுக்க முயல்வோரைத் தடுத்து நன்னெறி காட்டுதற்கும் சிராத்ததீபிகை இன்றியமையாதது ஒன்றென்பது எமது துணிபு.

பாபநாசம், 3-9-35. இங்ஙனம், முத்துக்குமாரத்தம்பிரான் சுவாமிகள்.

---

பெரும்புலவர் பண்டித

ஸ்ரீமத் அ. கந்தசாமிப்பிள்ளை அவர்கள்

எழுதியது.

தங்கள் புஸ்தகங்களை நன்கு படித்துப் பார்த்தேன். அவை சைவசமயிகளுக்குப் பெரிதும் பயன் தருவன. இக்காலத்துக்கு இன்றியமையாதன. அவநெறியைப்போக்கி அருணெறியைப் போதிப்பன. பாராட்டப் பெறத்தக்க பெருமையுடையன ****.

சிராத்ததீபிகை:—இஃது, சேதுபுராணம், காஞ்சிப்புராணம், கந்தபுராணம் முதலிய புராணங்களிலிருந்தும், தேவாரம் முதலிய திராவிட சுருதிகளினின்றும் காட்டப்

பெறும் மேற்கோள்களுடன் திகழ்வது. ஆசிரியர் வள்ளுவனார் விதித்த ஐம்புலத்தாறு ஓம்புநெறிக்கண் முதற்கண் கூறியுள்ள தென்புலத்தார்கடன் ஆற்றுவார், அதுபற்றிய விதிவிலக்குகளை ஒருங்குணர்தற்கு அருந்துணையாக நிலவி அந்நெறிக்கட் சிரத்தையை உண்டாக்கி, அவ்வக்கொள்கைகளை அறவே களைந்து ஆத்திகத்தை நிறுத்துவது. சிவாகம சாரமாயுள்ளது.

இவற்றின் ஆசிரியராகிய குருக்கள் அவர்கள் நீண்ட காலம் அரோகதிடகாத்திரர்களாய் வீற்றிருந்து இன்னும் இவைபோன்ற சீரிய நூல்களை இயற்றிச் சைவ உலகுக்கு உபகரிக்குமாறு இறைவன் திருவருளை இறைஞ்சுகின்றேன்.

அரசினர் கல்லூரி,
கும்பகோணம்.
30-6-36.

இங்ஙனம்,
அ. கந்தசாமிப்பிள்ளை.

---

கவிராஜபண்டிதர்

ஸ்ரீமத் ரா. திம்மப்பையர் அவர்கள்

எழுதியது.

சிவாகமபண்டிதரும் செந்தமிழ்ப்புலவரும் உத்தம கட்டாளருமாகிய பிரம்மஸ்ரீ குருக்கள் அவர்கள் சமூகத்துக்கு ****விஞ்ஞாபனம். வேதாகமங்களிலும் சித்தாந்த சாஸ்திரங்கள் திருவருட்பனுவல்கள் புராணங்கள் ஆகிய புனித நூல்களிலும் தங்களிடத்துள்ள பேரறிவையும் சீரிய கூரிய மதிநுட்பத்தையும் தங்கள் வெளியீடுகள் புலப்படுத்துகின்றன. ****கடவுளில்லை; சமயமில்லை, வினைகளுமில்லையெனப்பிதற்றித்திரியும் பித்தர் தம்மனநாணி முகங்கவிழ

அவர்கட்குத் தலையிலடித்து மதிகொளுத்துவதுபோல் விடயங்களிலங்கச் சிராத்ததீபிகையைப் பிரகடனஞ் செய்திருத்தலையறிந்து அதனை முறையேயோதி நுணுகிய கருத்துணர்ந்து பேரானந்தமெய்தினேன். இந்நூலை யோதிய பின்னரேனும் ஒருவனுக்கு ஆஸ்திக புத்தியும் பெற்றோர்ப் பேணலும் இம்மை மறுமை யுண்மையும் புலனாகாமற் போமாயின், அவன் மனிதனேயாயினும் அங்ஙனம் அறிஞராற் கருதப்படான்.

ரா. திம்மப்பையர்,
விரிவுரையாளர்,
முனிசிபல் கல்லூரி, சேலம்.
10-9-35.

உ

சிவமயம்.

# சிராத்ததீபிகை.

## தீக்ஷை.

ஆசாரியரிடம் தீக்ஷைபெற்றுத் தங்கள் தங்கள் அதிகாரத்துக்குத் தக்கவாறு குருவாலே போதிக்கப்பட்ட சைவாசாரங்களை வழுவாது அநுட்டித்த மாணுக்கர்கள் போகத்தையும் மோக்ஷத்தையும் அடைவார்கள்.

### சைவசமயநெறி.

சரித்தார்க்குச் சைவ சமய நெறியி
னுரித்தாங்கு புத்திமுத்தி யும்.

தீ - ஞானத்தைக் கொடுப்பது. க்ஷா - பாசத்தை யறுப்பது; எனவே பாசத்தை யறுத்து ஞானத்தைக் கொடுப்பது தீக்ஷையாகும்.

### ஆசாரத்தில் வழுவியவர்கள்.

சைவாசாரங்களை அநுட்டியாதவர்கள் புத்தி தத்துவத்திலேயுள்ள பைசாசபுவனத்திலே பிசாசுகளாய் அங்குள்ள போகங்களை நூறு இருடிவருடம் வரையும் புசிப்பார்கள்.

இந்தநெறி தன்னி லியங்கார் பிசாசாவ
ரந்தவினை போம்பரிகா ரத்து.

தீக்ஷை பெற்றபின் ஆசாரத்திலே வழுவிய பாவங்களுள் புத்திபூருவமாகச் செய்தபாவம் பிராயச்சித்தத்தினால் நீங்கும். அபுத்திபூருவமாகச் செய்த பாவம் அந்தியேஷ்டி, பாஷாணத்தாபனம், உதகதானம் (தருப்பணம்), பிண்டதானம், அத்தி

சஞ்சயனம், நக்கினப்பிரச்சாதனம், ஏகோத்தரவிருத்தி, நவச்சிராத்தம், சங்கிதாசிராத்தம், இடப உத்சர்ச்சனம், ஏகோத்திட்டம், பஞ்சதசசிராத்தம், சோதகும்பசிராத்தம், சபிண்டீகரணம் என்னும் இக்கிரியைகளாலே நீங்கும். இக்கிரியைகள் செய்யாவிடத்து அப்பாவங்கள் புசித்தே தீரவேண்டும்.

சமயாசாரத்தில் வாஞ்சையுற்றும் பற்றற்றுமிருக்கும் நைட்டிகனும் சந்நியாசியும் சமயாசாரத்திலே சிவலோபம் வரின், அந்தியத்திற் பஞ்சாக்ஷரத்திலே பதினாயிரம் உருச் செபிக்கவேண்டும். அன்றேல் ஒரு சிவஞானிக்குப் பூசை செய்யவேண்டும்.

## கோதானுதி.

இறக்கப்போகின்றவர் மரணசமயத்திலே தாம் செய்த பாவங்கணீங்கிச் சுககதிப் பேறெய்தவேண்டிக் கோதானம் முதலியவற்றைப் பிராமணரை வரித்துச் செய்க. அல்லது இறக்கப் போகின்றவரைக் குறித்து அவர் புத்திரர் முதலாயினோருஞ் செய்யலாமென நூல்கள் கூறுகின்றன.

## அந்தியேட்டி.

அந்தியேட்டி என்பது கடைசியிற் செய்யும் யாகம் எனப்பொருள்படும் இஷ்டி - யாகம். சைவர்கள் இறந்தவழி அந்தியேஷ்டி செய்வித்துச், சிவரூபமான அவர் தேகத்தைச் சிவாக்கினியிற் சேர்த்தலாகிய சம்ஸ்காரஞ் செய்க. அந்தியேட்டி செய்யின் சமயாசாரத்தில் வழுவிய குற்றந்தீருமுகத்தால் சிவத்துவ சித்தியுண்டாகும். ஆசாரமற்றவர்கள் இறந்தவழி, சிவாக்கினியினுல் மந்திரமின்றி, அவர் தேகத்தைத் தகனஞ்செய்து ஆசௌசாந்தத்தில் அந்தியேஷ்டி செய்து மற்றைய கிரியைகளையுஞ் செய்தல் முறையாம்.*

---

* சுப்பிரபேதம், விமலம்.

## தகனுதிகளுக்கு அதிகாரிகள்.

தகனமுதலிய கிரியைகளுக்கு அதிகாரிகள் இருபதின்மராவார்:—(1) புத்திரன், (2) மனைவி, (3) மகள், (4) தமையன், (5) இளைய சகோதரன், (6) சகோதரன் புதல்வன், (7) பிதா, (8) தாய், (9) மருமகள், (10) சகோதரி, (11) சகோதரி புதல்வன், (12) பிதிர்வழிச் சபிண்டன், (13) சமானோதகன், (14) தாய்வழிச் சபிண்டன், (15) தாயின் சமானோதகன், (16) சீடன், (17) குரு, (18) மகள் கணவன், (19) தோழன், (20) அரசன் என்பவர்கள். இவர்களுள் புத்திரனே பிரதான கருத்தா ஆவன். ஏனையோர் இரண்டாம் பிரதானமாவர். பிரதானகருத்தா இல்லையாயின் அடுத்தவர் வரிசையாகப் பிரதானமாவர். பிரதானனிருந்தால் அடுத்தவருக்கதிகாரமில்லை. மகன், சகோதரன், அவன்மகன் முதலியோர் முறையே அதிகாரிகள் எனவும் நூல்கள் கூறுகின்றன.

முதற் கருத்தாவாகிய புத்திரனுக்குச் சம்ஸ்காரம் வரையினது; பிண்டதானம் வரையினது; சஞ்சயனம் வரையினது; சபிண்டீகரணம் வரையினது என ஐவகைச் சுத்திகளுளவாம்.

இனி, "செனனத்தின் முன் மரணத்தில் புதைத்தலே சம்ஸ்காரமாம். அப்பால் ஐந்தாம் வயசுவரையினதாகிய மரணத்தில் பிண்டதானம் வரையினதாம்; அப்பால் எட்டாம் வயசு வரையாய மரணத்தில் அத்திசஞ்சயனம் வரையினதாம். அப்பால் பன்னிரண்டாம் வயசுவரையாய மரணத்தில் ஏகோத்திட்டம் வரையினதாம்; அப்பால் மரணத்தில் சபிண்டீகரணம் வரையினதாம்" என்று சைவாசௌசதீபிகை செப்புகின்றது.

தகனமுதலிய கிரியைகளைச் செய்வதற்குத் தீக்ஷை யுடையோரே அதிகாரிகளாவர். காலோத்தரத்திலே "தீக்ஷை யினால் மெய்ப்பொருளைக் கேட்க அதிகாரியாவான்; பூசையில் அதிகாரியாவான்; தீக்ஷையாற்றானே ஆச்சிரம தருமங்கள் அமைகின்றன; தீக்ஷையால் ஞானமுண்டாம்; தீக்ஷையாற் சுத்தரானவர்களே பிரேதக்கிரியையில் அதிகாரிகள்" என்று கூறப்பட்டது.

பிரமசாரியானவன் தன் மாதா பிதா அல்லாதவருக்குத் தகனாதி கிரியைகளைச் செய்தல் கூடாது. செய்யின் மீட்டும் உபநயனம் செய்து கொள்ளக்கடவன். தத்தபுத்திரன் பார்வணம், மாசிகம், பிண்டதானம் இவைகளைச் செய்தலாகும். சிஷ்யர் தமக்கு உபதேசம் செய்த குரு சிவபதமடைந்த மாச நக்ஷத்திரத்திலாயினும், திதியிலாயினும் அவரைக் குறித்து வருஷந்தோறுந் தவறாது குருபூசை செய்தல் வேண்டும்.

## அத்திசஞ்சயனம்.

முதலாம் மூன்றாம் ஐந்தாம் ஏழாம் ஒன்பதாம் நாட்களுள் ஒன்றனுள்ளே அஸ்திசஞ்சயனஞ் செய்க. அஸ்தியைப் புண்ணிய ஜலத்திலிடுக. அத்திசஞ்சயனம் - எலும்பு பொறுக்குதல்.

கபிலமுனிவருடைய விழித்தீயினால் சகரபுத்திரர் அறுபதினாயிரவர் பாதாளத்தில் உடம்பு சாம்பராய் நரகத்துன்ப மனுபவித்தனர். கங்கா தீர்த்தத்தை அவர்கள் எலும்பிற் பாயச்செய்து நற்கதியடைவிக்க விரும்பிய தம் வழித்தோன்றலான பகீரதமகாராசன் அநேக காலம் சிவபெருமானை நோக்கித் தவமியற்றினான். சிவபெருமானுடைய உத்தரவினால் பிரமலோகத்திலிருந்த கங்கை வேகமாய்ப் பாய்ந்து

வந்தது. கடவுள் அதனைத் தமது திருமுடியிற்றாங்கிச் சிறு துளியை விடுத்தனர். அது பாதாளத்திற் சென்று அவர்கள் எலும்பிற் பாய்ந்தது; அவ்விசேடத்தால் அவர்கள் நற்கதியடைந்தார்கள். இச்சரித்திரத்தால் அத்தியைப் புண்ணிய தீர்த்தத்திலிடுவதனால் ஆன்மா புண்ணிய உலகம் அடையுமென்பது நன்கு தேறப்படும். காசிகாண்டத்துக் கங்கையில் எலும்பு விழுந்த அத்தியாயமும் இதனை யுணர்த்தும்.

## நக்கினப் பிரச்சாதனம்.

ஒரு குடத்தில் அரிசியை நிரப்பி அக்குடத்தைச் சுற்றி வஸ்திரங்கட்டி, வெண்கலப்பாத்திரத்தில் நெய்யையூற்றி, இல்வாழ்வானுக்குப் பரமசிவனைத் தியானம்பண்ணிக்கொண்டு கொடுக்க. இது நக்கினப் பிரச்சாதனங் கொடுக்கும் முறையாகும். காமிகாகமத்திலே "தீக்ஷிதனாகிய இல்வாழ்வானுக்கு நக்கினப் பிரசாதனங் கொடுக்க. அது தகனமுடிவிலே இறந்தவனைச் சுட்டி வஸ்திரத்தோடும் அரிசியோடும் கொடுக்கற்பாலது" எனக் கூறப்பட்டிருக்கிறது. அது, ஆசௌச தீபிகையில்,

"மொழியவரு நக்கினத்தை மூடவருஞ் சிராத்த
முந்துதக னந்தத்தின் மரித்தவனைக் குறித்துப்
பழியினவ வத்திரமும் பச்சரிசி தானும்
பகர்ந்திடுநற் றக்கிணையு முதலான பொருள்கள்
அழிவில்சிவ தீக்கையுள வில்வால்வான் கையி
லளித்திடுக ******."

என்பதனால் அறியப்படும்.

## பாஷாணத்தாபனம்.

அந்தியேஷ்டி முற்றியபின் பாஷாணத் தாபனஞ்செய்க. சாதகன் ஆசாரியனுமிவர்களுக்கு ஈசாதி நாமத்தாலும், சமயி புத்திரகனுமிவர்களுக்கு கந்தாதி நாமத்தாலும் மும்மூன்று தர்ப்பணஞ் செய்க * பிண்டப்பிரதானமும் ஏகோத்தர விருத்தியும் புரிக.

## ஏகோத்தரவிருத்தி.

முதல் நாளில் மூன்று தருப்பணமும், இரண்டாம்நாள் முதலாக ஆசௌசம் முடியுமளவும் தினம் ஒவ்வொன்று விருத்தியான தருப்பணமும் செய்க. ஏகோத்தரவிருத்தி தருப்பணம் பிராமணருக்கு எழுபத்தைந்தும், க்ஷத்திரியருக்கு நூற்றிரண்டும், வைசியருக்கு நூற்றைம்பதும், சூத்திரருக்கு ஐஞ்ஞூற்றிருபத்தைந்துமாம். தருப்பணத் தொகையினளவு ஏகோத்தரவிருத்தி சிராத்தம் அவ்வத்தினங்களிலே செய்க.

## பிண்டதானம்.

நான்கு வருணத்தாருக்கும் ஒவ்வொரு நாளுக்கு ஒவ்வொன்றாக ஆசௌசம் முடியுமளவும் இடுக. பிராமணர் பத்துப் பிண்டமும் க்ஷத்திரியர் பன்னிரண்டு பிண்டமும் வைசியர் பதினைந்து பிண்டமும் சூத்திரர் முப்பது பிண்டமு மிடுக.†

## நவச்சிராத்தம்.

முதலாநாள், மூன்றாநாள், ஐந்தாநாள், ஏழாநாள், ஒன்பதாநாள், பதினொராநாள் ஆகிய இந்நாட்களில் சற்பாத்திரரை வரித்துத் தூபம் தீபம் சந்தனம் முதலியவின்றிப் பொருள்களைக் கொடுப்பது நவச்சிராத்தமாம். நவம் - புதிது. எனவே முதலிற் செய்யும் சிராத்தமென்பது கருத்து.

---

* சைவாசௌசதீபிகை செ. 149.

† உத்தரகாமிகம் பிதிர்யஞ்ஞவிதிப்படலம் 18.

"நாலாநாளிற்றுன், ஐந்தாநாளிற்றுன், ஒன்பதாநாளிற்றுன், பதினொராநாளிற்றுன் இறந்தவனைக்குறித்துச் செய்யுந்தானம் நவச்சிராத்தம் எனப்படும்" என்று காமிகாகமம் கூறும்.

பாஷாணமிண்டமிடுதலால் உருவ அமைப்பு உண்டாகும். ஏகோத்தரவிருத்தி தருப்பணம் என்னுமிவற்றுல் இறந்தவர் களுக்குப் பசி தாகம் வெப்புத்தீரும். நவசிராத்தத்தால் பிரேதத்தன்மை * நீங்கும். அதன்பின் உருத்திரபலியிடுக. இது சிவப்பிரீதியின் பொருட்டுச் செய்யப்படுவதாம்.

## பாஷாண உத்தாபனம்.

பிராமணர் முதலியோர் பத்தாநாள் முதலிய நாட்களில் பாஷாணத்தை உத்தியாபனஞ் செய்து வாத்திய ஒலியுடன் தீர்த்தத்திலிட்டு ஸ்நானஞ் செய்க. இதனுல், ஆன்மா புண்ணிய தீர்த்தத்தில் மூழ்கிய பலனுண்டாம்.

## சங்கிதா சிராத்தம்.

நேத்திரமந்திரமொழிந்த பத்து மந்திரங்களைப் பத்துச் சற்பாத்திரரிடம் ஆவாகித்து அவர்களுக்குத் தானஞ்செய்வது சங்கிதாசிராத்தம் எனப்படும். இதனுல் தீக்ஷை பெற்றபின் ஆசாரத்தில் வந்தலோபம் நிவிர்த்தியாகும்.

## † இடபோத்சர்ச்சனம்.

வைதிகர்களும் சைவர்களும் ஏகோத்திட்டத்தின்முன் பரமசிவனுக்கு நீலஇடபம் விடுதலாகிய இடபோத்சர்ச்சனம் என்னும் கிரியைச் செய்க என்று காமிகாகமம் கூறும். மற்றுஞ் சிராத்தங்களனைத்துஞ் செய்தாலும் சிவபெருமானைக் குறித்து இடபம் விடாராயின் பிசாசுருவம் அகலாது.

---

* பசி தாகங்களால் உண்டாகும் அதிகமான துக்கத்தை அனுபவிப்பதே பிரேதத்துவமாம்.

† விருஷோத்ஸர்ச்சனம்.

## ஆசௌச தீபிகை.

தேசமிசை யிருவர்களு மேகோதிட் டத்திற்
சிவனுக்கு விதிப்படியே நீலவிடை விடுக
ஆசகலுஞ் சிராத்தங்க ளனைத்துஞ்செய் தாலு
மவ்விடபம் விட்டிலரேற் பிசாசுருவ மகலா
தேசிலாச் சிராத்தங்க ளென்பவையுஞ் செய்தே
யெழிலேறும் விடக்கடவ னீசுரனுக் கன்பால்.

நீலவிடையாவது உடம்பு சிவப்பும் முகமும் முதுகும் சாம்பல் நிறமும், குளம்பும் கொம்பும் வெண்மை நிறமுமாக வுள்ள இடபமாம். நீலவிடைவிடும் முறை வைத்தியநாத தீக்ஷிதீயத்திலும் விரிவாகக் கூறப்பட்டிருக்கிறது.

## ஏகோத்திட்டம்—மாசிகம்.

பின்னர் ஏகோத்திட்டத்தையும், பஞ்சதச (பதினைந்து) மாசிக சிராத்தத்தையுஞ் செய்க. ஒருவரை வரித்துச் செய்வது ஏகோத்திஷ்டமாம். இது ஆத்தியசிராத்தம் என்றுஞ் சொல்லப்படும். விசுவதேவவரணம் பிதிர்சப்தம் விகிரம் பிரதக்ஷிணம் முதலியன ஏகோத்திட்டத்தில் இல்லை என அறிக. ஏகோத்திட்டம் மாசிகம் இவற்றால் பிசாசத்துவ நிவிர்த்தி உண்டாகும்.

## சோதகும்ப சிராத்தம்.

முக்கிய கருத்தா ஓராண்டுவரை சோதகும்ப சிராத்தஞ் செய்க. சோதகும்ப சிராத்தஞ் செய்தலால் பசி தாகந்தீரும். "சபிண்டீகரணம் முதல் வருஷாப்திகம் வரையில் தன் சக்திக்குத்தக்கபடி தீர்த்தம் நிறைந்த கும்பத்தோடு அன்னத்தைக் கொடுக்க" என்று ஸ்மிருதி கூறுகின்றது. அவ்வாறே வடமொழிச் சைவாசௌசதீபிகையும் செப்புமென அறிக.

## சபிண்டீகரணம்.

ஏகோத்திட்டத்துக்கு அடுத்தநாளிலே பிதிர்தேவாகளோடு இறந்தவரைச் சம்யோசித்தலாகிய சபிண்டீகரணஞ் செய்க. சபிண்டீகரணஞ் செய்தலால் ஆன்மா பிரேதத்தன்மை நீங்கிச் சிவலோகமடைதலாம்.

## மாசிக சிராத்தம்.

சபிண்டீகரணஞ் செய்தபின்னர், ஆவிருத்தியாக விதிக்கப்படும் அவ்வக்காலங்களில் மாசிக சிராத்தங்களைச் செய்க. இறந்த நாண்முதல் இருபத்தேழு நாளின்மேல் மூன்று நாட்களுட் செய்யப்படுவது ஊனமாசிகம்; நாற்பதாம்நாள் முதல் நாற்பத்தைந்துக்குள் செய்யப்படுவது திரைபக்ஷிக மாசிகம்; நூற்றெழுபது நாளின்மேற் பத்து நாட்களுள் (ஏழாமாசிகத்துக்குமுன்) செய்யப்படுவது ஊனஷாண்மாசிகம்; முந்நூற்று நாற்பத்தைந்து நாளின்மேல் பதினைந்து நாட்களுள் (ஆப்திகத்துக்குமுன்) செய்யப்படுவது ஊனாப்திகமாசிகம். இந்த நான்கு மாசிகங்களும், இரண்டாமாதமுதற் பன்னிரண்டா மாதம்வரை இறந்த திதிகளிற் செய்யப்படும் பதினொரு மாசிகங்களுமாகப் பதினைந்து மாசிகங்கள் செய்யப்பட வேண்டியன.

ஊனமாசிகம், திரைபக்ஷிகமாசிகம், ஊனஷாண்மாசிகம், ஊனாப்திகமாசிகம் என்னும் நான்கு மாசிகங்களையும் வாராதி தோஷங்களில்லாத நாட்களிற் செய்க. வெள்ளிக்கிழமையிலும், நந்தை சதுர்த்தசி அமாவாசை என்னுந் திதிகளிலும், கேட்டை பூரம் பூரட்டாதி ஆயிலியம் மூலம் கார்த்திகை என்னும் நக்ஷத்திரங்களிலும் * திரிபுஷ்கரயோகம் துவிபுஷ்கர

* துதியை சப்தமி துவாதசி என்னுந் திதிகளும், கார்த்திகை உத்தரம் உத்தராடம் புனர்பூசம் விசாகம் பூரட்டாதி என்னும் நக்ஷத்திரங்களும் ஞாயிறு செவ்வாய் சனி என்னும் வாரங்களுமாகிய மூன்றுங் கூடுவது திரிபுஷ்கரயோகமாம். இம்மூன்றனுள் இரண்டு கூடுவது துவிபுஷ்கரயோகமாம்.

யோகம் என்பவற்றிலும் செய்தலாகாது. மற்றைப் பதினொரு மாசிகங்களையும் காலதோஷம் பாராது அவ்வத் திதிகளிற் செய்க.

## சிராத்தம்.

முக்கிய கருத்தா அட்டகை* முதலிய சிராத்தங்களையும் சோதகும்ப சிராத்தத்தையும், இறந்த அத்திதியிலே ஆப்திக சிராத்தத்தையுஞ் செய்க. வருடந்தோறும் இறந்த மாதமுந் திதியும் வரும்பொழுதும் விசுவாசத்தோடு சிராத்தஞ்செய்க. இவையெல்லாம் காமிகத்து விரித்துரைக்கப்பட்டன.

"செய்துநிறை வேறியபின் சேர்வருடாந் தத்திற்
றிவசமெழில் பெறச்செய்வான்."

என ஆசௌசதீபிகையும்.

*"இருமுதுகுரவரிறந்திடுமதிநாளாண்டுதோறெய்துழியுகாதி
வருமனுவாதியுவாமுதற்றினத்தின்வயங்குதென்புலத்தவர்க்
திருமறையவர்க்குமுறையினூட்டிடுக........" [குறித்துக்

எனக் † காஞ்சிப்புராணமும் கூறுகின்றன.

சிரத்தையோடு ஓமாதிகள் செய்து பிதா முதலியோர்களை உத்தேசித்துச் சற்பாத்திரப் பிராமணர்களுக்குப் போசன முதலியவைகளைக் கொடுப்பது சிராத்தம்எனப்படும். சிராத்தம் - சிரத்தையோடு செய்யப்படுவது. சிரத்தையின்றிப் பிறவிடங்களிலே மனத்தைச் செலுத்திச் செய்யப்படுவது சிராத்தமாகாது. சிரத்தை - விசுவாசம்.

* அட்டகையினிலக்கணம் பின்னர்க் கூறப்படும்.

† காஞ்சிப்புராணம் முதற்காண்டம் ஒழுக்கப்படலம்.

## அபரக்கிரியையின் அவசியம்.

அந்தியேட்டியோடு கூடிய அபரக்கிரியைகளெல்லாம் இறந்தவர் சிவத்துவமடைதற்கு ஏதுவாயிருத்தலினல், பிதா மாதா முதலாயினேருக்குப் புத்திரர் முதலாயினேர் சிரத்தையோடு தவருது உலோபமின்றித் தம்பொருளளவுக் கேற்ப அபரக்கிரியைகளைச் செய்தல் முறையாம். அபரம் - பிந்தியது. இறந்தபின் செய்வது அபரக்கிரியையாம்.

தந்தை தாயர் உயிரோடிருக்கும்பொழுது அவர்களுக்கு வேண்டுவன செய்து வழிபடுதலும், அவர் இறந்தபின்னர்ச் சிரத்தையோடு * உத்தரக்கிரியைகளைச் செய்து வழிபடுதலும் புத்திரர்களுக்குக் கடனும். இதை அறிவுறுத்துவதற்காகவே ஔவைத் தாயார் "தந்தை தாய்ப்பேண்" என்றருளிச் செய்தார்.

கிருகஸ்தனுற் செய்யப்படும் தென்புலத்தார் வழிபாடு தெய்வந்தொழுதல், விருந்தோம்புதல் முதலிய தருமங்களு ளெல்லாம் சிராத்தம் தருப்பணம் செய்தலாகிய தென்புலத்தார் வழிபாடே அவனுக்கு இன்றியமையாத சிறப்பு வழிபாடாம். திருவள்ளுவநாயனர் உத்தரவேதத்திலே,

தென்புலத்தார் தெய்வம் விருந்தொக்க லானென்
றைம்புலத்தா றோம்ப றலை. [௪௩

என்னுங் குறளிலே தென்புலத்தாரை முதற்கண்வைத்து இதனைத் தெரிவித்தருளினர்.

---

* உத்தரக்கிரியை - ஒருவரது மரணத்தின்பின் அவரைக் குறித்துச் செய்யும் கருமங்கள்; அவை தகனம் அந்தியேட்டி முதலியன.

இனி, பரஞ்சோதிமுனிவர் திருவிளையாடற் புராணத்திலே,

"கற்றவை களைந்து தூற்றிக் கூப்பியூர்க் காணித் தெய்வ
மற்றவர்க் கற்றவாறீந் தளவைகண் டாறி லொன்று ஐ
கொற்றவர்கடமைகொள்ளப்பண்டியிற்கொடுபோய்த்*தென்னா
டுற்றவர் சுற்றந் தெய்வம் விருந்தினர்க் கூட்டி யுண்பார்."

எனவும்,

†"தென்மலைக் கிழவன் தெய்வம் தென்புலவாண ரொக்கல்
தன்மனை விருந்து காத்துத் தருக்கினா விருக்கு நாளில்."

எனவும், கச்சியப்பமுனிவர் விநாயக புராணத்திலே,

"பிரமசாரி வனத்துறைவோன் பேணுந்துறவி தென்புலத்தார்
குரவர்தேவர்விருந்தொக்கல்கோக்கண்மறையோரிறந்தோர்க
ளிரவலாளருறுப்பிலர்களெய்த்தும்பிணியாளர்கண்முதியோர்
விரவுபாலர் சிசுதமது மிசையா ரிவரை யோம்பு கவே."

எனவும், பிதிரர் வழிபாடு செய்யவேண்டுமென்பதை வற்புறுத்தி யிருத்தலும் கண்டுகொள்க. ‡

அன்புண்டாகும்படி தென்புலத்தார் முதலாயினோருக்குக் கொடாது தான்மாத்திரம் உண்ணும் உணவு மிக இழிவுள்ளது என்னுங் கருத்தமைய,

---

* தென்னாடுற்றவர் - தென்புலத்தார்.

† தென்மலைக்கிழவன் - பொதியமலைக்குரிய உக்கிரகுமார பாண்டியர்.

‡ அறவழிச் செலவுநீதி யரசுகொள் கடனு நல்கி
யுறமலி யெச்சம்வாரி யுயர்பெரு மனையி னுய்த்துத்
திறமலி தென்புலத்தா ராதியர் சிறப்ப வோம்பிப்
பெறலரு மின்பந் துய்த்துப் பெரிதுவாழ் குடிகளெங்கும்.

—மீனாட்சிசுந்தரம்பிள்ளை திருத்துருத்திப்புராணம்.

தென்புலத்தார் தெய்வம் விருந்தொக்க லென்றிவரோ
டின்புறத்தா னுண்ட லினிதாமே—துன்புறவே
தக்கவரை யின்றித் தனித்துண்ட றன்கவர்மீன்
கொக்கருந்த லென்றே குறி.

என்று நீதிவெண்பாவிற் கூறப்பட்டிருக்கின்றது. இவ்வுண்மை

தேவர்தென்புலத்தோர் துறந்தவர்க்களித்த
சேடநல்லமுதினுமினிதாம்
யாவரேயெனினுமதிதியரிறந்தோரிமையவ
ரீங்கவர்க்கன்றிக்
கூவல்போலாழ்ந்தபாழ்வயிறதனிற்
கொட்டுதற்கமைத்தவெண்சோறு
நாவுறைபுழுவாமெனமறையனைத்து
நவின்றிடுமென்பர்நன்குணர்ந்தோர்.

எனக் காசிக்காண்டத்தில் ஆசாரங்கூறிய அத்தியாயத்தில் அதிவீரராமபாண்டியர் ஓதியவாற்றானு முணரப்படும்.

தந்தைதாயர் தீவினை தேய்தற்பொருட்டு அவரை நோக்கிப் புதல்வர் செய்யும் சிராத்தம் முதலிய தானதருமங்கள் அவரைச் சென்றடைதலால் திருவள்ளுவநாயனார்,

* எழுபிறப்புந் தீயவை தீண்டா பழிபிறங்காப்
பண்புடை மக்கட் பெறின்.

எனவும்,

† தம்பொரு ளென்பதம் மக்க ளவர்பொரு
டந்தம் வினையான் வரும்.

எனவும் ஓதியருளினார்.

---

* புதல்வரைப்பெறுதல்; 2.

† புதல்வரைப்பெறுதல் 3.

இக்குறள் வெண்பாக்களினாலும் புத்திரராயினோர் தந்தை தாய் முதலிய இறந்த பிதிர்பொருட்டு நித்தியர்களாகிய பிதிர்தேவர்களுக்குச் சிராத்தம் முதலிய தருமங்களைச் செய்யுங் கடமையுடையவர் என்பதை விளக்கியருளினர். * இவ்வுண்மைகளை யெல்லாம்,

மைந்த னைப்பெறு கின்றது மாசிலாப்
புந்தி யன்பொடு போற்றி வளர்ப்பதுந்
தந்தை மாண்டுழித் தம்முறைக் கேற்றிட
வந்த மில்கட னாற்றுதற் கேயன்றே.

எனக் † கந்தபுராணத்திலும்,

ஆங்கதன் பின்னர்க் காம மறம்பொருட் பேற்றி னோடு
மோங்குசீர்ப் பிதிர்வானோர் கடன்களி னொழிவும்வேண்டி
மாங்குயிற் கிளவிமென்றோண் மனைவியை மணப்பர்.

எனக் காஞ்சிப்புராணத்திலும்,

வாசந்தி பேசி மணம்புணர்ந் தப்பதி
நேசந் தெவிட்டி நினைப்பொழிவார் பின்னை
யாசந்தி மேல்வைத் தமைய வழுதிட்டுப்
பாசந்தி சுட்டுப் பலியட்டி னார்களே.

எனத் திருமந்திரத்திலும்,

‡ மூன்று கடன்கழித்த பார்ப்பானு மோர்ந்து
முறைநிலை கோடா வரசுஞ்—சிறைநின்
றலவலை யில்லாக் குடியுமிம் மூவ
ருலக மெனப்படு வார். எனத் திரிகடுகத்திலும்,

---

* "தென்புலத்தார்கடனை மாற்றுவது-மகவானன்றியில்லை" எனச் சிவஞானமுனிவர் காஞ்சிப்புராணத்திற் கூறினர்.

† இரணியன் யுத்தப்படலம் 126.

‡ மூன்றுகடன்:—தேவர்கடன், பிதிரர்கடன், முனிவர்கடன்

ஆவு மானியற் பார்ப்பன மாக்களும்
பெண்டிரும் பிணியுடை யீரும் பேணித்
தென்புல வாழ்நர்க் கருங்கட னிறுக்கும்
பொன்போற் புதல்வர்ப் பெறாஅ தீரும்
எம்மம்பு கடிவிடுது நும்மரண் சேர்மினென
அறத்தாறு நுவலும் பூட்கை மறத்திறன்.

எனப் புறநானூற்றிலும்,

எழுமைப்பிறப்புந்தீவினைவந்தெய்தாச்சிறப்புந்தென்புலத்தார் முழுதுமுவக்குங்கடன்சாலமுடிக்கு மாண்புமபெறுதலினாற் பழுதில்தவங்கண்மிகப்புரிந்து பயந்தமைந்தார் தமையவர்க்குக் குழுமமவையின்முந்திருப்பஅறிவுகொளுத்தல்வேண்டுமால்.

என விநாயகபுராணத்திலும்,

"தெய்வம் அதிதி வேலைக்காரர் பிதிரர் தான் என்னும் ஐந்து இடத்துக்கும் எவன் திருப்தி செய்ய வில்லையோ, அவன் சுவாசம் விடினும் உயிருள்ளவனல்லன்" என மநுதருமசாத்திரத்தினும் கூறப்பட்டவாற்றானும் உணர்ந்துகொள்க. ஆன்றோர்,

பெற்றாள் வளர்த்தாள் பெயரிட்டாள் பெற்றபிள்ளை
பித்தானு லென்செய்வாள் பின்.

எனக் கூறியதூஉம் அன்னை தந்தையருடைய கடன்களைச் செய்யாத பிள்ளைகளும் அவர்களைப் பெற்ற அன்னை தந்தையரும் பயனையிழந்தனர் என்பதை நோக்கியேயென்று உணர்க.

மகன்றந்தைக் காற்றுமுதவி யிவன்றந்தை
யென்னோற்றான் கொல்லெனுஞ் சொல்.

என வருவதூஉம் கண்டுகொள்க.

பிதிரருக்குச் சிராத்தஞ் செய்பவர்கள் தீர்க்காயுளையும், சுகத்தையும், நற்சந்ததியையும், சிவபெருமானுடைய கிருபையையும் அடைவார்கள். அவர்களுக்குத் தீவினையும் வறுமையும் இடரும் நீங்கும். **சோமசம்புபத்ததியில்,**

"சிவசிராத்தமானது செய்யப்பட்டால் சிவபெருமானுடைய மகாத்மியத்தினால் தேவர்கள் மனுஷ்யர்கள் பிதிரர்கள் அசுரர்கள் ஆகிய இவர்கள் திருப்தியடைந்து இரு குலங்களையும் விருத்தி செய்கின்றனர்" என்று சொல்லப்பட்டது. அரசனாகிய பாண்டு என்பான்,

"மென்பாலகரைப் பயவாதவர் மெய்ம்மையாகத்
தென்பாலவர் தம்பசித்தீ தணிதீர்க்கமாட்டார்."

எனக் கூறியதாகப் பாரதத்தில் சொல்லப்பட்டிருக்கிறது.

மனுவம்சத்திலே தோன்றிய செங்கோன் மன்னனாகிய திலீபன் புத்திரப்பேறின்மையால் வருந்தித் தனது குலகுருவாகிய வசிட்டமகாமுனிவரை அடைந்து பணிந்து "பகைவர் அஞ்சத்தக்க வலியுடையேனாகிய யான் புதல்வர் இல்லாமையினாலே எமது முன்னோராய் முன்னாளிற் பிறந்திறந்தவர்களாகிய அப்பிதிரர்க்குக் கொடுக்கும் பிண்டமிடுதல் தருப்பணஞ் செய்தல் முதலிய கடன்கள் பங்கப்ப அதனால் வருந்துகின்றேன்" என்று தனது குறையை விண்ணப்பஞ் செய்தான் எனவும், திலீபனுடைய புத்திரனாகிய இரகு யோகமார்க்கத்தினாலே தேகத்தைவிட்டு முத்தியடைந்தபொழுது அவன் புத்திரனாகிய அஜகுமாரன் நிட்டையிலிருந்து இறந்தோருக்குச் செய்யும் விதியைச் சந்நியாசிகளாற் செய்வித்துப் பின்னர்ப்

பிதிர்பக்தியினால் அந்த இரகுவுக்குத் திலோதக பிண்ட தானாதிகளைச் செய்தான் எனவும் இரகுவமிசம் செப்புகின்றது.

தசரதராசன் இறந்தபின்பு அவன் மகனாகிய பரதன் என்பான் அபரச்சடங்குகள் முழுவதையும் பிழையறச் செய்தமையும், சடாயு உயிர்நீத்தபின் அச்சடாயுவுக்கு ஸ்ரீராமபிரான் அந்தியக்கிரியைகளை மிக்க சிரத்தையோடு செய்தமையும் இராமாயணம் முதலிய நூல்களால் நன்கு புலப்படுகின்றன.

தவசிரேட்டராய் விளங்கிய குச்சகமுனிவர் தமது புத்திரராகிய மிருககண்டுயரை நோக்கி, "புத்திரனே! நீ இறந்தமேலவருடைய துன்பத்தையும் நரகமடைதலையும் நீக்கும்வண்ணம் புதல்வரைப் பெறும்பொருட்டு மணஞ் செய்யவேண்டும். புத்திரன் என்னும் சொல்லின் பொருளை மறந்தாய்போலும். இறந்தவருக்கு உணவு முதலியன கொடுத்து இறந்தவர்களுக்குத் தீக்கடன் நீர்க்கடன்களைச் செய்து பலதருமங்களை ஆற்றி விருந்தோம்பும் இல்லறமன்றி மானுடப் பிறவியாலாகும் பேருதவியாது என்றுஉபதேசித்தாரெனக் கந்தபுராணம் கூறும்.

................................................இறந்தமேலோர்
துன்பமுநிரயஞ்சேர்வுந்துடைத்திடுந்தொன்மைநோக்கி
யன்புறுபுதல்வர்க்காகவரிவையைக்கோடியையா.

சித்திரமிலகுசெவ்வாய்ச்சிறடிச்சிறுவர்தம்மைப்
* புத்திரரென்னுஞ்சொற்குப்பொருணிலையயர்த்திபோலாம்.
—கந்தபுராணம்.

---

* புத்திரர் - புத் என்னும் நரகத்தைநீக்கிப் பிதிரரைக்காக்கின்றவர்.

* துறந்தவர்கள்வேண்டியதொர் துப்புரவுநல்கி
யிறந்தவர்கள்காமுறுமிருங்கடனியற்றி
அறம்பலவுயாற்றிவிருந்தோம்புமுறையல்லாற்
பிறந்தநெறியாலுளதொர்பேருதவியாதோ.

—கந்தபுராணம்.

"பிதிரர்பொருட்டு ஓமம் பிண்டதானம் தர்ப்பணம் முதலியவைகளைக் கைமறித்துச் செய்வானுகிய புத்திரனை யுடையவனே பெரிய சுவர்க்கத்தை யடைவா" னென்று மத்தியந்தமுனிவர் தமது புத்திரராகிய வியாக்கிரபாத முனிவருக்குக் கூறினர் என்று தில்லைவாழந்தணரும் சந்தானுசாரியருமாகிய உமாபதிசிவாசாரியர் கோயிற்புராணத்தில் திருவாய்மலர்ந்தருளியிருக்கின்றனர்.

புகழனரும் அவரது துணைவியாராகிய மாதினியாரும் இறந்தபின், அவர்கள் பிள்ளைகளாகிய திலகவதியாரும் மருணீக்கியாரும் அவர்களுக்குச் செய்யும் அந்திய கருமங்களைக் குறைவின்றி முடித்தார்களென்று பெரியபுராணம் நவிலுகின்றது.

"ஒருவாறுபெருங்கிளைஞர்மனந்தேற்றத்துயரொழிந்து
பெருவானமடைந்தவர்க்கு† செய்கடன்கள்பெருக்கினர்"

புலவராயினும், ஞானிகளாயினும், மூடர்களாயினும், பெண்களாயினும், பிரமசாரியாயினும், அரசராயினும் மற்றெவர்களாயினும் பிதா மாதா முதலாயினோருக்குச் சிராத்தத்தைச் செய்யாதொழிந்தால் கோடிஜனனத்திற் சண்டாளராவார்கள் என்பது நூல் துணிபு.

---

* இறந்துளோர்க்குமிரவலர்க்குந்தனி
துறந்துளோர்கட்குந் துப்புரவீதலால்
அறந்தவாதுயரில்லறமாற்றுதல்
சிறந்ததென்னவினி துள்ளந்தேறினன்.

—காசிக்காண்டம்.

† செய்கடன்கள்:—சமக்கடன் நீர்க்கடன் முதலியன; இவை செய்தே தீரவேண்டிய கருமமாதலின் கடன் எனப்படும்.

இங்ஙனமிருத்தலால், யாவரும் தங்கள் தங்கள் சக்திக் கியன்றவாறு அபரக்கிரியைகளை விதிப்படி செய்து நன்மை பெறக்கடவர்.

---

## பிதிர் தேவர்கள்.

சைவசமயத்திற்பிறந்தும் சிராத்தஉண்மைகளை அறியாத சிலர் "செத்தவர் எந்தப் பிறவியிற் புகுந்தனரோ; எங்கே போயினரோ; அவர்கள்பொருட்டுச் செய்யும் சிராத்த முதலியவைகளை அவர்கள் எங்ஙனமேற்றுப் பலனடைவர்; பிதிர் கருமம் செய்வதனாற் பிரயோசனம் இல்லை" என்பர். அதனுண்மையைக் கூறுதும்.

இறந்த தந்தை தாயர் தங்கள் வினைக்கேற்ப, உயர்திணையாய்ப் பிறந்தார்களோ; அஃறிணையாய்ப் பிறந்தார்களோ; சுவர்க்கத்தை அடைந்தார்களோ; நரகத்தை அடைந்தார்களோ; பூமியிற் சென்றார்களா என்றறிந்து மக்கள் நேரே பிதிர்வழிபாடு செய்யவும், இறந்த பிதிர்கள் அதனையறிந்து ஏற்கவும் இயலாதென்பதை ஓர்ந்தே முற்றறிவும் எல்லா வல்லமையும் உடையராகிய சிவபெருமான் அவ்வழிபாட்டை ஏற்று, இறந்தவர்கள் எப்பிறப்பிற் புகுந்தனரோ, அப்பிறவியிற் செலுத்திப் பயனடைவித்தற்பொருட்டு பிதிர்தேவரைப் படைத்தனர்.

அவர்கள் கோபமில்லாதவர்களாயும், எப்பொழுதுஞ் சிவத்தியானமுள்ளவர்களாயும், பிரசித்தர்களாயும் பரிசுத்தர்களாயும் இருக்கிறார்கள்.

இறந்தவர்கள் தங்கள் தங்கள் வினைக்கேற்பத் தேவர்களாயின், பிதிர்தேவர்கள் சிராத்த வழிபாட்டை ஏற்று, அவர்களுக்கு அமுதமாக உதவுவார்கள். அசுரராய்ப் பிறந்தால்

அவர்கள் புசிக்கும் போகமாக உதவுவர்; பசுவாய்ப்பிறந்தால், அதன் உணவான புல், வைக்கோலாகக் கொடுப்பர். பாம்பாகத் தோன்றின், அதற்கு வாயு ஆகாரமாகச் சேர்ப்பர்; அரக்கராகவும் பசாசாகவும் செனித்தால் தசையாகவும் இரத்தமாகவும் செலுத்துவர்; மனுடராய்த் தோன்றின் அன்னபானாதிகளாய் உதவுவர்.

யாம் பிதிர்தேவர்களைப்பூசிக்க அவர்கள் அவ்வழிபாட்டையேற்று இறந்தவர்களுக்கு உபகரிப்பர். அது எதுபோலுமென்னில்; நமது ஊரிலுள்ள ஒருவர் இந்தியா முதலிய வேற்றூரிற்சென்று வசிக்கும் தமது உறவினனுக்கு அனுப்பும்படி ஈண்டுள்ள தபால் நிலையத்தலைவரிடம் இங்கே வழங்கப்பெறும் நாணயமாகக் கொடுக்க, அத்தொகையை ஆண்டுள்ள தலைவர் அங்கே வழங்கப்பெறும் நாணயமாக அவனுக்குக் கொடுத்தல் போலாம்.

கவ்வியவாகனர், அனலர், சோமர், யமர், அர்யம்ணர், அக்கினிஷ்வாத்தர், பர்ஹிஷதர், ஆஜ்யபர், சோமபர் என்போர் தேவபிதிர்கள் எனப்படுவர். இவர்கள் மகலோகத்துக்கு மேலுள்ள சனலோகத்தில் இருப்பார்கள் என மிருகேந்திராகமத்திற் சொல்லப்பட்டுள்ளது. அது,

> "மகலோகமிருகோடிமார்க்கண்டாதி
> மாமுனிவர்பலர்செறிவர்மற்றதன்மேல்—
> இகலோகம்பரவுசனலோக
> மெல்லையெண்கோடிபிதிர்தேவரிருப்பரங்கண்."

எனக் கந்தபுராணத்திற் கூறியவாற்றானுமுணரப்படும்.

ஈசர் முதலியவர்கள் விசேஷபிதிரர்கள் எனப்படுவார்கள். இவர்கள் அதற்குமேலுள்ள புவனங்களில் வசிப்பார்கள்.

பிதாவின்குலம் மாதாவின்குலம் இரண்டினும் குருவால் கிரியை செயப்படாது நரகத்திலே கிடப்பவர் பிரேத பிதிர்கள் எனப்படுவர். மிருகேந்திரத்திலே "இயமனுடைய சம்யமினி என்னும் பட்டணம் உயர்ந்த மதில்கள் சூழ்ந்து காலபாசம் பிதிர்கள் வியாதி பிரேதகணம் மாரி என்னும் ரோகம் இவை களாற் சூழப்பட்டிருக்கும் என்று சொல்லப்பட்டிருக்கிறது.

வைதிகருக்குரிய பிதிர்தேவர்கள்: வசு ருத்திரர் ஆதித்தர் என்போரும், விசுவதேவர் சிராத்தத்தில் புரூரவர் ஆர்த்திரவர் என்போரும், சபிண்டீகரணத்தில் காலர் காமர் என்போருமாம்.

புவநேசுவரபதங்கொடுக்கும் லோகதாமிணி தீக்ஷைபெற் றோருக்கும் பிரம விட்டுணு ருத்திரர் என்போரும் விசுவதேவர் யமன் அருணன் என்போருமாம்.

சமயிக்கும் புத்திரகருக்கும் பிதிர்தேவர் கந்தர் சண்டர் கணதீசர் என்போரும் விசுவதேவர் நந்தியும் மகாகாளருமாம்.

சாதகருக்கும் ஆசாரியருக்கும் பிதிர்தேவர் ஈசர் சதா சிவர் சாந்தர் என்போரும் விசுவதேவர் (கலாக்கினி) ருத்திர ரும் அநந்தருமாம்.

பிதிர்தேவரையும் விசுவதேவர்களையுஞ் சிவசத்தி அதிட் டித்து நிற்கும் பிரமா முதலிய மூவர் லௌகிக தேவர் என்றும், கந்தர் முதல் மூவர் ருத்திரதேவர் என்றும், ஈசர் முதல் மூவர் சிவதேவர் என்றுஞ் சொல்லப்படுவர்.

சிவசிராத்தஞ் செய்யப்பெற்றோர் சிவபதப்பேறடைவர் தாழ்ந்தபதப்பேறுடையவர்கள் தம்மினுயர்ந்த பதப்பேறுடை யவர்களை வணங்குவது முறையாகும். இவரனைவரையும் பிராகிருதர் வணங்குதல் வேண்டும். இவையனைத்திற்கும் பிரமாணம் சித்தாந்தசாராவளி வியாக்கியானம், சோமசம்பு பத்ததி, கிரணாகமம் முதலியவற்றிற் காண்க.

## சமயி—புத்திரர்—சாதகர்.

இனி, சமயியாவார் சமயதீக்ஷைபெற்றுச் சிவாகம விதிப்படி நித்தியகருமத்தை மாத்திரஞ் செய்பவரும், அதனுடன் சிவாலயத் தொண்டைச் செய்பவருமாம். புத்திரகராவார் சமயதீக்ஷையும் விசேஷதீக்ஷையும் பெற்று ஸ்நானம், தர்ப்பணம், சிவபூசை, அக்னிகிகார்யம், சிவத்தியானம் ஆகிய இவற்றைச்செய்து அதிதிகளுக்கு அன்னமூட்டி ஆசாரியரும் சாதகரும் ஏவியதை அன்புடன் செய்பவர். சாதகராவார் சமயம் விசேடம் நிர்வாணம் என்னும் மூன்று தீக்ஷையையும்பெற்று நித்தியகருமத்தையும் நைமித்திக கருமத்தையும் சிவாகம விதிப்படிபண்ணி ஆசாரியனை வணங்கி நிருமலரான சிவபெருமானுடைய திருவடிகளில் அன்பு பொருந்தித் தன்னோடு சகசமாயுள்ள ஆணவமுதலிய மும்மலங்களையும் நீக்குபவர். ஆசாரியராவார் மூன்று தீக்ஷைகளுடன் அபிஷேகமும்பெற்று நித்தியம் நைமித்தியம் காமியம் என்னுங் கருமங்களைத் தான் எப்பொழுதுஞ் செய்து சாதகர் புத்திரகர் சமயிகள் என்னும் மூவகை மாணுக்கரையுங் கொண்டு, அவரவர் அதிகாரானுகுணமாகிய கர்மங்களைச் செய்விப்பவராம். இனி, சிராத்தவகைகள் கூறப்படுகின்றன.

## சிராத்தவகைகள்.

சிராத்தமானது நித்திய சிராத்தம் முதலாகப் பலவகைப்படும். நாடோறும் பிதிரரைக் குறித்துச் செய்யப்படும் தருப்பனம் நித்திய சிராத்தம் எனப்படும்.

> "வைகறை யெழுந்து கங்கைநீ ராடி
> வானவர் முனிவர்தென் புலத்தார்
> செய்கட னுவப்பத் தென்புன லிறைத்து
> நியாசமுந் தியானமு மாற்றி."
>
> —காஞ்சிப்புராணம்.

பிதா மாதாக்கள் முதலாயினோர் இறந்த மாதமும் திதியும் வருஷந்தோறும் வரும்பொழுது விசுவாசத்தோடு விதிப்படி செய்வது நைமித்திய சிராத்தமெனப்படும். "எத்திதியில் இறந்தனரோ அத்திதியிற் சிராத்தம் செய்வது உத்தமம்" என்று காமிகாகமம் செப்பும்.

அமாவாசை, சூரியகிரகணம், சந்திரகிரகணம், விதிபாதயோகம், உத்தராயணம், சித்திரைவிஷு, மாசப்பிறப்பு, வைகாசிமாதச் சுக்கிலபக்ஷத் திருதியை, கார்த்திகைமாதச் சுக்கிலபக்ஷநவமி, புரட்டாதி மாதத்துக் கிருஷ்ணபக்ஷத் திரயோதசி, மாசிமாதத்து அமாவாசை என்னு மித்தினங்களிலே புண்ணிய தீர்த்தத்திலே ஸ்நானம் பண்ணி பிதிர் தருப்பணஞ் செய்து அதிதிகளோடும் சுற்றத்தாரோடும் போசனம்பண்ணி விரத நியமத்துடன் இருப்பது தீர்த்த சிராத்தமெனவும் காமிய சிராத்தமெனவும் படும்.

இவ்வாறுயர்தீர்த்தத்தருகெய்தித்தவமாதி
செவ்வாய்மையபுரியிற்றிகழ்தானம்பலசெய்யி
னவ்வானருள்பிதிரர்க்குளமமையக்கடனாற்றில்
துவ்வாவமிழ்தனையாய்ப்பயன்சொல்லின்முடியாதால்.

—* திருவானைக்காப்புராணம்.

[1]மதிகதிரோனிடத்தொடுங்குதினம்
[2]திக்கட்பிறப்[3]பரவம்வாயங்காந்து
கதிர்கடமைவிழுங்குதினம்[4]விதிபாத
மிந்நாளிற்கருதிமூழ்கித்
துதிகட்குப்பணந்தானம்புரிதன்மனு
வோதுதலத்தொகையொன்றற்கொன்
றதிகபலனம்முறையேநூறாயிர
நூறாயிரமோரனந்தமாகும்.

* தீர்த்தவிசேடப்படலம்: 21.

1 அமாவாசை; 2 மாசப்பிறப்பு; 3 கிரகணபுண்ணியகாலம்; 4 யோத்திலொன்று.

பிறந்தநாளந்நீர்மூழ்கின்மேலைவெப்பிறவிப்பௌவ
மறிந்திடு[5] மறி[6] தேன்[7] கும்பமதிகளின்மூழ்கித்தென்பால்
உறைந்தவர்தமக்குப்பிண்டமுதவினாலவர்தாமாழ்ந்து
நிறைந்திடுபிறவிப்பௌவநின்றுமேலெழுவரன்றே.

—திருவிளையாடற்புராணம்.

ஆயகிருச்சிரமிருபத்தைந்துதவும்
பெரும்பலன்றனடல்வெஞ்சூரன்
மாயவடிவேலவிடுத்தவானவர்
சேனாபதிவாழ்மயூரவெற்பிற்
றூயசரவணநன்னீர்தோய்ந்திடி
னாற்றிடுமந்தத்தொல்லைவாவி
நேயமுடன்படிந்துதருப்பணம்
புரிந்தோர்க்கனந்தபலனேருமன்னே.

—மயூரகிரிப்புராணம்.

மன்பெருந்தீர்த்தங்களாடிமாநிலம்
பொன்பசுமுதலிவைவழங்கிப்பூசுரர்க்
கன்பினாலமுதுறழடிசிலூட்டிப்பின்
தென்புலத்தவர்கடன்செய்யவேண்டுமால்.

—* காசிக்காண்டம்.

ஸ்நானஞ் செய்தவர்களுடைய பாவங்களை நீக்கி அவர்களுக்கு வீடுபேறு உதவுதற்காகவும், புண்ணியகாலங்களிலே தென்புலத்தாரைக் குறித்துத் தருப்பணம் முதலியவற்றைச் செய்து அவர்களைப் பிறவியாகிய சமுத்திரத்தினின்று கரையேற்றுதற்காகவும், கருணாநிதியாகிய சிவபெருமான் தமது திருவருளையே தீர்த்த வடிவாக்கி விடுத்தனர்.

---

[5] மேடம்; [6] கார்த்திகை; [7] மாசி.

* ஆறாவது தீர்த்தமகிமையுரைத்த அத்தியாயம்.

தருப்பணஞ் செய்யுமிடத்து, அபசவ்வியமாக உபவீதந் தரித்தவனுயக் கைகளில் தருப்பையைக் குறுக்காகப் பிடித்து அத்தருப்பை மூலத்திலிருந்து தர்ச்சனி அங்குட்ட மூலத்தால் விழும் தில நீரைக்கொண்டு சுவதாந்தமான பிதிர் நாமங்களைச் சொல்லித் திருப்தி செய்க.

தருப்பண முடிவிலே "என்குல பிதிர்களே, பூமியில் விடப்பட்ட இந்த ஜலத்தினுல் நற்கதியையும் திருப்தியையும் அடையுங்கள்" என்று சொல்லி தருப்பையை எள்ளுடன ஜலக்கரையிற் போடுக.

நாந்தி என்னும்

# விருத்தி சிராத்தம்.

புஞ்சவனம், சீமந்தம், சாதகர்மம், நாமகரணம், உபநிஷ்கிரமணம், அன்னப்பிராசனம், கர்ணவேதனம், சௌளம், உபநயனம், விரதம், விவாகம், கிருகாரம்பம், கிரகப்பிரவேசம், சாந்தி முதலிய சுபகாரியங்களில் முதற்றினத்திலாவது அத்தினத்திலாவது பிதிர் தேவர்களைக் குறித்துச் செய்வது நாந்தியென்னும் விருத்தி சிராத்தமாம். இது மங்களசிராத்தமெனவுங் கூறப்படும். மோகத்தினுற் பிதிர்பூசையைச் செய்யாது விடுவராயின் பிதிர்சாபத்தை அடைவார்கள். இச்சிராத்தம் பிதிருடைய ஆசிர்வாதத்தைப் பெறும்பொருட்டுச் செய்யப்படுவதாம்.

நாந்திமுகச் சிராத்தவிதி வீரதந்திரம் என்னும் சைவாகமத்திலே விரிவுறக் கூறப்பட்டிருக்கின்றது. திருவானைக்காப்புராணத்தில் "திருவளருஞ் சுபக்கிரியை யனைத்தினுக்கு நாந்திமுகஞ் செய்தல்வேண்டும்" என வருவதுங்காண்க. நம்பி என்பான் வள்ளிநாயகியாரைச் சுப்பிரமணியக் கடவு

ளுக்குத் தத்தஞ்செய்தபொழுது நாந்திசிராத்தமுஞ் செய்தா
னென்று கச்சியப்பமுனிவர் தணிகைபுராணத்திற் கூறியிருத்
தலினாலும் இதன்பெருமை விளங்கும். "மூத்த நூல்வழியா
நாந்திமுதலெனும் சிராத்தமோம்பி."

இனி, புஞ்சவனமாவது ஆண்மகவு பிறந்தற்குச் செய்யுங்
கிரியை. சீமந்தமாவது மூன்றிடத்து விளர்ப்புள்ள பன்றிமுள்
ளினால் தலைமயிரை வகிர்ந்து செய்யுங்கிரியை. சாதகர்மமாவது
புத்திரோற்பத்தியாய காலத்துச் செய்யுங் கிரியை. நாமகரண
மாவது பெயரிடுதலிற் செய்யுங் கிரியை. உபநிஷ்கிரமண
மாவது குழந்தையை எடுத்துக்கொண்டு கோயிலுக்குச்
செல்லுதல். கரணவேதனமாவது காதுகுத்துதலிற் செய்யுங்
கிரியை. சௌளமாவது மயிர்வினைக்குச் செய்யுங் கிரியை.
உபநயனமாவது பரமசிவனைத் தரிசிப்பதற்குச் சமீபமாகிய
நயனத்தை உண்டாக்குங் கிரியை. விரதம் - பிரமசரிய
விரதத்தை யொழித்தற்குச் செய்யுங்கிரியை.

## கயா சிராத்தம்.

கயாசிராத்தஞ் செய்து பிதிர்களுக்குத் திருப்தியைக்
கொடுப்பதாயும், போகமோக்ஷங்களைக் கொடுப்பதாயுமிருக்
கிறது. கயா சிராத்தத்தால் எழுகோத்திரத்துள்ள நூற்றொரு
குலமும் விருத்தியாகின்றது.

பிதாவின் குலம் இருபத்து நான்கு; மாதாவின்குலம்
இருபது; மனைவிகுலம் பதினாறு; சகோதரி குலம் பன்னி
ரண்டு; மகள் குலம் பதினொன்று; பிதாவின் சகோதரி குலம்
பத்து; மாதாவின் சகோதரி குலம் எட்டு. ஆகக் குலம்
நூற்றொன்று வருவது காண்க

அயோத்தி, மதுரை, மாயை, காசி, காஞ்சி, அவந்தி, துவாரகை என்னும் ஏழு முத்தித் தலங்களிலும் ஏனைய புண்ணிய க்ஷேத்திரங்களிலும் சிராத்தகருமஞ் செய்வது மிக்க புண்ணியமாம்.

## அமாவாசைச் சிராத்தம்.

மனிதர்களுடைய ஒரு மாசம் பிதிரர்களுக்கு ஒரு தினமாம். சுக்கிலபக்ஷம் இரவும் கிருஷ்ணபக்ஷம் பகலுமாம். ஆதலால் மாசந்தோறும்வரும் அமாவாசையில் தவறாது தருப்பணஞ் செய்து விரதமுடையவர்களாயிருத்தல் வேண்டும். அமாவாசைச் சிராத்தம் அனுட்டித்தார் பெறும் பயனும் பிறவும் காரணாகமத்திற் சொல்லப்பட்டிருக்கின்றது. பூரணையில் மாதாவைக் குறித்து விரதமனுட்டிக்க.

## சிராத்தவகை தொண்ணூற்றாறு.

மனுவாதிதினம் 14; மகாளயம் 16; யுகாதி 4; சங்கிராந்தி 12; அமாவாசை 12; வியதிபாதம் 13; வைதிருதி 13, அட்டகை 12. இவை ஷண்ணவதி தினம் என்று சொல்லப்படும். ஷண்ணவதி—தொண்ணூற்றாறு. இத்தினங்களில் பிதிர்களுக்குச் சிராத்ததருப்பணங்கள் செய்தல் நன்றாம்.

புரட்டாதிமாத அபரபக்க அட்டமியும், ஆவணி அமாவாசையும், ஆடிமாத பூருவபக்கத்தசமியும், கார்த்திகைமாத சுக்கிலபக்கத் துவாதசியும், ஐப்பசிமாத சுக்கிலபக்க நவமியும், ஆனி பங்குனி சித்திரை ஆடி கார்த்திகை என்னும் மாதங்களிற் பௌர்ணிமையும், மாசிமாதச் சத்தமியும், தைச்சுக்கில ஏகாதசியும், சித்திரை புரட்டாதிமாத சுக்கில திருதியையும் பதினான்கு மனுவாதி தினங்களாம்.

புரட்டாதி மாதத்தில் கிருஷ்ணபக்கப் பிரதமை முதல் சுக்கிலபக்கம் பிரதமைவரையுமுள்ள தினங்கள் பதினறு மகாளயதினங்களாம்.

கார்த்திகைமாதச் சுக்கில நவமியும், வைகாசிமாதச் சுக்கில திருதியையும், மாசி அமாவாசையும், புரட்டாதிமாதக் கிருஷ்ணபக்கத் திரயோதசியும் நான்கு யுகாதிகளாம்.

தைமாத அபரபக்கச் சத்தமி அட்டமி நவமிகளும், பங்குனிமாத அபர சத்தமி அட்டமி நவமிகளும், மார்கழி மாத அபரசத்தமி அட்டமி நவமிகளும், மாசிமாத அபர சத்தமி அட்டமி நவமிகளும் பன்னிரு அட்டகைகளாம்.

## பஞ்சமகாயஞ்ஞம்.

இனி, பஞ்சமகாயஞ்ஞம் கூறப்படுகின்றது. கிருகஸ்தனைவன் பிரமயஞ்ஞம், தேவயஞ்ஞம், பிதிர்யஞ்ஞம், பூதயஞ்ஞம், மானுடயஞ்ஞம் என்னும் பஞ்சமகாயஞ்ஞங்களையும் விதிதவறுது ஆற்றுதல்வேண்டுமென நூல்கள் கூறுகின்றன. பஞ்சமகாயஞ்ஞம் = ஐம்பெருவேள்வி. யஞ்ஞம் = எச்சம், வேள்வி. இவ்வேள்விகள் ஐந்தனுள், பிரமயஞ்ஞமாவது வேதமோதுதலாம். வேதமோதுதலால், முனிவர்கள் திருப்தியாகின்றனர். தேவயஞ்ஞமாவது தேவர்களுக்கு அக்கினியிலே ஓமஞ்செய்தலாம். இதனுல், தேவர்கள் திருப்தியாகின்றனர். பிதிர்யஞ்ஞமாவது சிராத்தம் பிதிர்தருப்பணஞ் செய்தலாம். சிராத்த தருப்பணத்தால், பிதிர்கள் திருப்தியாகின்றனர். பூதயஞ்ஞமாவது பூதங்களுக்குப் பலியன்னமிடுதலாம். அது வாயசபலி முதலியன. பலியிடுவதனுல், பூதங்கள் திருப்தியாகின்றன. மானுடயஞ்ஞமாவது அதிதிகளுக்கு அன்னங்கொடுத்தலாம். அதிதி - முன்னெருகாலத்தும் அறியப்படாத பரதேசி.

சதுமறைபகர் தல்பிரமநன்மகமாந் தருப்பணம்பிதிர்மகமாகும்
விதிமுறையோமமியற்றுதறேவவெச்சமாம் விளம்புநற்பலிகள்
உதவுதல்பூதவெச்சமாமுள்ளமுவந்துதன்பாலினிதினடைந்த
[அதிதி
யர்க்களித்தன்மானுடவெச்சமாகனவந்தெச்சமென்றறைவர்.

—காசிகாண்டம் ஆசாரங்கூறிய அத்தியாயம்.

## இன்னார் இன்னாருக்கு இன்ன கிரியை என்பது.

பிராமணர் முதலிய முதன் மூன்று வருணத்தாருள்ளும் உபநயனமாத்திரம் பெற்றவருக்கு வைதிகக் கிரியைகள் மாத்திரம் செய்யத்தக்கன. உபநயனத்தோடு சிவதீக்ஷையும் பெற்றவருக்கு வைதிகக்கிரியைகளும் ஆகமக்கிரியைகளும் விரவிச் செய்யத்தக்கன. ஆகமக்கிரியைகள் செய்யாவிடின் அவர் பெற்ற சிவதீக்ஷயினாலே ஒரு சிறிதும் பயனில்லை. சிவதீக்ஷை பெற்ற சூத்திரருக்கும் அனுலோமருக்கும் ஆகமக் கிரியைகள் செய்யத்தக்கன. சிவதீக்ஷை பெறாதவருக்குப் பிரணவமின்றி நமோந்தமாகிய தேவதோத்திரங்களைக்கொண்டு கிரியைகள் செய்யத்தக்கன.

மறையவர் முதன்மூவருர்க்குந் தீர்க்கையுண்டேன்
வைதிகந்தாந் திரம்விரவி வகுத்தலாகு
மறைதருதாந் திரமொன்றுற் புரிதருனு
மமையுமருட் டீக்கையில தாயின்வேத
முறையுளிச்செய் திடன்முறையாம் பின்னோன்றீக்கை
முற்றினனே லாகமத்தான் முடித்தலேயா
கிறைதருதாந் திரத்தியற்று ராயிற்றீக்கை
நெடும்பயனின் றுந்தீக்கை நிகழ்ந்துளார்க்கே ௬

—திருவானைக்காப்புராணம்.

அங்கிரத்தந்தணரடியாராக
வலைகடற்பாயலிற்றுயின்றானடியாராகத்
துங்கமருடீக்கையிலரேலன்னோர்க்குத்
தூயபிரணவமின்றிநமோந்தமாகத்
தங்கியிடுங்கேவதோத்திரத்தைச்செய்து
தருங்கிரியையியற்றுவது தகுதியாகும்.
—திருவானைக்காப்புராணம்.

## ஆம சிராத்தம்.

பிராமணர் முதலிய மூன்று வருணத்தாரும் அன்ன சிராத்தஞ் செய்க. ஆபத்துக்காலங்களிலும், கிரகணகாலத்திலும், தீர்த்தயாத்திரை செல்லுமிடத்தும் வேறூருக்குச் சென்றகாலத்தும் ஆமசிராத்தஞ் செய்யக் கடவர். மற்றைய வருணத்தார்கள் என்றும் ஆமசிராத்தமே செய்க.

அருந்துயர்சேராபத்தாங்காலங் கடனிலு
மக்கினியில்லாவிடத்துங்கிரகணகாலத்தும்
பொருந்துலகிற்றீர்த்தயாத்திரைசெல்லுமிடத்தும்
பூசுரர்முன்மூவர்களுமபுகன்றவிதிப்படியே
திருந்துமெழிலாமசிராத்தஞ்செய்யக்கடவர்.
—ஆசௌச தீபிகை.

ஆமசிராத்தமுஞ் செய்ய முடியாதபக்ஷத்தில் இயன்ற இரணியத்தைப் பிராமணர்களுக்குக் கொடுக்க.

## பொருள் இல்லாதவர்.

சிராத்தத்துக்குப் பொருள் இல்லாதவன் காய் கனி கிழங்கு எள்ளு இவைகளையேனும் சற்பாத்திரப் பிராமணருக்குக் கொடுத்துப் பிரதக்ஷிண நமஸ்காரஞ்செய்து திலதருப்

பணம் பண்ணித் தான் திருப்தியாகப் போசனஞ் செய்தல் வேண்டும். தருப்பணஞ் செய்தற்கும் வலிமைபெறப்படா தாயின், பசுக்கூட்டங்களுக்குப் புல்லைக்கொடுக்க.

"இடிகொண்மாவினுற்பிண்டமேயாயினுமிடுக
இல்லையென்றிடிலெள்ளுடன்புனல்கையாலிறைக்க
வல்லவம்பெறுதாயினுமாவினமருந்தப்
புல்லதாயினும்போடுக........"

—திருசெந்தூர்ப்புராணம்.

## சிராத்தஞ் செய்யுமிடம்.

தன்வீட்டிலாயினும் திருநந்தனவனத்திலாயினும், மலையிலாயினும், புண்ணியதீர்த்தக்கரையிலாயினும், திருக்கோயிலிலாயினும், குருவின்மனையிலாயினும் கோமயத்தினாலே சுத்தி செய்யப்பட்ட இடத்திலே சிராத்தஞ் செய்யக் கடவர்.

## காலம்.

பிராதக்காலம், சங்கவகாலம், மத்தியானகாலம், அபரான்னகாலம், சாயான்னகாலமெனப் பகற்காலம் ஐந்துகூறாக வகுக்கப்படும். சூரியோதயம் முதல் ஆறுநாழிகை வரையும் பிராதக்காலமாம். அதற்குமேற் பன்னிரண்டு நாழிகைவரையும் சங்கவகாலமாம். அதற்குமேற் பதினெட்டுநாழிகை வரையும் மத்தியான்ன காலமாம். அதற்குமேல் இருபத்து நான்கு நாழிகைவரையும் அபரான்ன காலமாம். அதற்குமேல் முப்பதுநாழிகை வரையும் சாயான்னகாலமாம்.

சிராத்தம் இராக்காலத்திலும், பிராதக்காலத்திலும், இராக்காலத்தின் இறுதிமூர்த்தமாகிய இரண்டு நாழிகையும் பகற்காலத்தின் இறுதிமூர்த்தமாகிய இரண்டு நாழிகையும் ஆகிய இரண்டு சந்தியாகாலத்திலுஞ் செய்தலாகாது. செய்

யின், அது இராக்கதருக்குப் பிரீதியாம். அன்ன சிராத்தம் அபரான்னத்திற் செய்தல் வேண்டும். ஆமசிராத்தத்தைச் சங்கவகாலத்திற் செய்து அபரான்னத்திற் போசனஞ்செய்க;

முற்பகலில் தேவகாரியங்களையும், அபரான்னத்திற் பிதிர்சிராத்தத்தையும், மத்தியானத்தில் ஏகோத்திட்டத்தையும் பிராதக்காலத்தில் விருத்திச் சிராத்தத்தையுஞ் செய்க.

## சிராத்ததினத்தில் செய்யத்தக்கவைகள்.

சிராத்ததினத்தில், திருக்கோயிலிலே கடவுளுக்குத் தன்னுலியன்றவரை அபிஷேகம் பூசை திருவிளக்கேற்றுதல் முதலியவைகளைச் செய்தல்வேண்டும்

"யாவர்க்குமாம் பசுவிற்கொருவாயுறை"

என்னுந் திருவாக்கைக் கடைப்பிடித்துப் பசுக்களுக்குப் புல்லுட்டோடுதல் வேண்டும்.

## செய்யத்தகாத கருமங்கள்.

நெற்குத்தல், பிச்சையிடுதல், தயிர்கடைதல், நெய் முதலிய பொருட்களை வாங்குதல் கொடுத்தல் முதலியன சிராத்தநடக்குந் தினத்திலே செய்யத்தகாத கருமங்களாம். சிராத்த கருத்தா சிராத்ததினத்திலும், சிராத்தத்துக்கு முதற்றினத்திலும், சிராத்தத்துக்கு மறுநாளும் க்ஷௌரஞ் செய்து கொள்ளுதல், பாரஞ்சுமத்தல், எண்ணெய் தேய்த்துக் கொள்ளுதல், இரண்டாமுறையும் புசித்தல், காமமடைதல் முதலியவற்றைத் தவிர்ந்து விரதசீலனாய் இருத்தல்வேண்டும்.

சிராத்தத்திலே கண்ணீர் விடுதலும், கோபித்தலும், துரிதஞ்செய்தலும், பொய்சொல்லலும், சிந்திய அன்னத்தைக் காலால் மிதித்தலும், இலையிலே அன்னத்தைத் தூவிப் பரி

மாறலும் ஆகாவாம். கண்ணீருடன் செய்யின் பிரேத சன்மங்களையும், கோபத்துடன் செய்யின் சத்துருக்களையும், பொய்சொல்லிச் செய்யின் நாய்களையும், அன்னத்தை மிதித்துச் செய்யின் இராக்கதர்களையும், தூவிப்பரிமாறின் பாவிகளையும் அச்சிராத்தபலன் அடைகின்றது.

## பாகஞ் செய்பவர்கள்.

சமசாதியல்லாதவர்களும், சிவதீக்ஷைபெறாதவர்களும், நித்தியகன்மம் விடுத்தவர்களும், சுசியற்றவர்களும், சிராத்தத்துக்கு உபயோகமானவைகளைச் சிராத்தம் நிறைவேறுதற்கு முன் புசிக்க நினைப்பவர்களும், பாகஞ்செய்யும்பொழுது வெற்றிலை பாக்குண்டல் முதலிய குற்றமுள்ளவர்களுமாகிய இவர்களாலே சமைக்கப்பட்ட அன்னமுதலியவை பிதிரர்களுக்குப் பிரீதியாகா; அவை இராக்கதர்களுக்கே பிரீதியாம்.

## சிராத்தத்துக்குரிய திரவியங்கள்.

சிராத்தத்துக்குரிய திரவியங்கள்:—எள்ளு, நெல்லரிசி, கோதுமை, சிறுபயறு, உழுந்து, சர்க்கரை, தேன், பசுநெய், பசுப்பால், பசுத்தயிர், எண்ணெய், சிகைக்காய், உப்பு, புளி, மிளகு, சீரகம், மஞ்சள், கடுகு, இஞ்சிக்கிழங்கு, வாழையிலை, வாழைத்தண்டு, வாழைக்காய், வாழைப்பழம், மாங்காய், மாம்பழம், பலாக்காய், பலாப்பழம், தேங்காய், இளநீர், புடலங்காய், அவரைக்காய், பாகற்காய், எலுமிச்சம்பழம், நெல்லிக்காய், சிறுகிழங்கு, வள்ளிக்கிழங்கு, கீரை, முன்னையிலை, முசுட்டையிலை, காரையிலை, பிரண்டை, கருவேப்பிலை, வெற்றிலை, பாக்கு, ஏலம், சுக்கு, கிராம்பு, சாதிக்காய், சாதிபத்திரி முதலியனவாம்.

## ஆகாத திரவியங்கள்.

சிராத்தத்துக்கு விலக்கப்பட்ட திரவியங்கள்:—கடலை, பீர்க்கங்காய், நீற்றுப் பூசனிக்காய், சுரைக்காய், கத்தரிக்காய், அத்திக்காய், முருங்கைக்காய், வாழைப்பூ, வெண்காயம், வெள்ளைப்பூண்டு, கொவ்வை, எருமைப்பால், எருமைத்தயிர், எருமைநெய், ஆட்டுப்பால, ஆட்டுத்தயிர் முதலியவைகளாம்.

## பத்திர புஷ்பங்கள்.

சிராத்தத்துக்கு உபயோகமாகும் பத்திர புஷ்பங்கள்:—துளசி, வில்வம், தாமரை, சண்பகம், அறுகு, புன்னை, நந்தியாவர்த்தை, எட்பூ, மருக்கொழுந்து, வெட்டிவேர் முதலியவைகளாம். உபயோகமாகாத பத்திரபுஷ்பங்கள்:—மகிழம்பூ, தாழம்பூ, அலரிப்பூ, சிறுசண்பகப்பூ முதலியவைகளாம். இவற்றுக்குப் பிரமாணம் காரணம் முதலிய ஆகமங்களிலும், அகோரசிவாசார்யபத்ததி வியாக்கியானத்திலும் மிருதுகளிலுங் காண்க.

## ஆசௌசம்வரின் செய்யும்விதி.

சனனாசௌச மரணாசௌசத்திலே சிராத்தம் வந்தால் ஆசௌசநிவிர்த்தியாகுந் தினத்திலே சிராத்தம் செய்தல் வேண்டும். விதவை தான் வீட்டுக்கு விலக்காயிருக்கும்போது தன் கணவனுடைய சிராத்ததினம் வந்தால் ஐந்தாநாள் சிராத்தஞ் செய்யக்கடவள். சிராத்தத்துக்குப் பாகஞ்செய்யத் தொடங்கியபின் ஆசௌசம் வரின், அச்சிராத்தம் முடியும் வரையும் அது கர்த்தாவைப் பற்றாது.

## செய்யும் விதி.

ஒருவன் இறந்தமாதந் தெரியாது தினம் மாத்திரந் தெரிந்தால் ஆடி மாசி மார்கழி புரட்டாதி என்னும் மாதங்க

ளுள் ஒன்றில்வரும் அத்தினத்திற் சிராத்தம் செய்க. இறந்த நாள் தெரியாது மாதந் தெரிந்தால் அம்மாசத்து அமாவாசையிற் செய்க * அல்லது கிருஷ்ணபக்ஷ அட்டமியிற் செய்க. பக்ஷந் தெரியாதாயின், கிருஷ்ணபக்கத்திற் செய்க. மரித்த மாதம் பக்கம் திதி இவைகளுள் ஒன்றுந் தெரியாதாயின், மரித்ததாகக் கேள்விப்பட்ட மாதத்து அமாவாசையிற் செய்க. தாய் தகப்பன் இருவருக்கும் ஒரே நாளிற் சிராத்தம் வந்தால் ஒன்றுகப்பாகஞ் செய்து இரு சிராத்தங்களையுஞ் செய்க. இவ்வாறு காலாதர்சம் முதலியவற்றில் கூறப்பட்டது.

## சற்பாத்திரர்.

சிராத்தமுதலிய தானங்களை அசற்பாத்திரருக்குக் கொடுத்தல் கூடாது. பதிசாத்திரங்களை யோதி அதன் பொருளை யறிந்து பாவங்களை விலக்கித் தருமங்களை அநுட்டித்துக் கடவுளை மெய்யன்போடு வழிபடுவோரும், தம்மைப் போலப் பிறரும் பரகதிபெற்று உய்யவேண்டுமென்று கருதி அவருக்கு நன்னெறியைப் போதிப்பவருமாயுள்ளவர் சற்பாத்திரர் எனப்படுவர் பா - பாவமாகிய கடலில் அமிழ்ந்திஞேர். திர - சிவபெருமான் திருவடிமலராகிய கரையிலிருத்துவான்.

பாவெனும்பதத்தினர்த்தம்பாவமென்கடலிற்பட்டார்
தேவனற்பதமென்றீரத்திருத்துவான்றிரத்தினர்த்தம்
பாவமென்கடற்பட்டாரைப்பரமர்தம்பதமென்பாரத்
தேவியேயிருத்துவானேபாத்திரமென்னப்பட்டான்.

—சிவதருமோத்தரம்.

---

* கிருஷ்ண ஏகாதசியுமாித்து.

## அசற்பாத்திரர்.

குருடரும், செவிடரும், ஊமையும், உறுப்புக்குறைந்தவரும், கோள்சொல்லுபவரும், பொறாமை கொள்ளுபவரும் குண்டகரும், கோளகரும், பதிசாஸ்திரத்தில் விருப்பில்லாதவரும், சிவநிந்தை குருநிந்தை சிவனடியார் நிந்தை சிவசாஸ்திர நிந்தை செய்பவரும், ஆசாரமில்லாதவரும், குரூரரும், வியபிசாரஞ் செய்பவரும், வைத்தியஞ் செய்பவரும், வாணிகஞ் செய்பவருமாகிய இவர்களைக் கொண்டு பிதிர் காரியங்களைச் செய்வித்தல் குற்றமாகும். அசற்பாத்திரருக்குக் கொடுத்தவர்கள், பசு மட்கலத்தில்விட்ட நீரைப்போலத் தானபலத்தையிழப்பர். இவற்றை சுவாயம்புவாகமம் காரணாகமம் முதலியவற்றானறிக. அன்புடன் கொடுத்தவைகளைத் திருப்தியுடன் ஏற்காதவர்கள் அசற்பாத்திரரேயாம்.

பெற்றமையு மென்னும் பெரியோரும் பெற்றபொருண்
மற்றமையு மென்றே மகிழ்வேந்து—முற்றியநன்
மானமிலா வில்லாளு மானமுறு வேசியரு
மீன முறுவா ரிவர்.

## சிராத்தயோக்கியரை நியமித்தல்.

சிராத்தகர்த்தா சிராத்தத்தின் பொருட்டு முதனாளாயினும் அன்றைக்காயினும் யோக்கியர்களாகிய பிராமணர்களை அடைந்து வணங்கி "அடியேன் செய்கின்ற சிராத்தத்தை ஏற்றுக்கொண்டு அருள் செய்க; யான் இவ்விரதத்தின் வழியில் நிற்பேன்" என்று பிரார்த்தித்து வரித்தல் வேண்டும். சிவசத்தியின் அதிட்டிப்பால் பிதிர்தேவர்கள் அவர்கள்பாற் சேர்ந்து நின்று அச்சிராத்தத்தை ஏற்று அருள் செய்வர்.

விசுவதேவர் பொருட்டு இருவரையும், பிதிரர்பொருட்டு மூவரையும் நியமித்தல் வேண்டும். அதிதி அப்பியாகதர் பொருட்டும் இருவரை நியமிக்க. சிராத்த யோக்கியர் இத் தொகையினர் கிடையாதவழி விசுவதேவர் பொருட்டு ஒரு வரையும், பிதிர்கள் பொருட்டு ஒருவரையும் வரித்தல் வேண்டும். இருவருங் கிடையாதவிடத்து விசுவதேவர்களை யும் பிதிர்களையும் கூர்ச்சங்களிலே முறையானே பூசைசெய்து பிண்டமிட்டு இயன்ற தக்ஷிணையை வேறு இடத்துள்ள சிராத்தயோக்கியரைக் குறித்துத் தத்தஞ்செய்தல் வேண்டும். அத்தக்ஷிணையைத் தப்பாமல் அவரிடத்தே கொண்டுபோய்க் கொடுத்தல் வேண்டும். அவரிறந்தால் அவர் புத்திரரிடத்துக் கொடுக்க. புத்திரரில்லாவிடின் தேவாலயத்துக்குக் கொடுக்க.

சிராத்தத்தில் வரிக்கும்பொழுது, பிதிரர்பொருட்டு ஆசாரியரையும், விசுவதேவர்பொருட்டுச் சாதகரையும்வரிக்க. குருவும் சாதகரும் கிடையாதபொழுது புத்திரகனையாவது சமயியையாவது நியமிக்கலாம்.

பிதிரர்பொருட்டு இறந்தவரின் உயர்ந்த தீக்ஷையுடைய வரை அல்லது அவரோடொத்த தீக்ஷையுடையவரைத் தப்பாது வரித்தல் வேண்டும்.

## அக்கினி வழிபாடு.

தண்டிலத்திலே அக்கினியைப் பூசித்துப் பிதிர்நாமங் களினால் ஓமஞ் செய்க. விவாகாதி சுபகாரியங்களில் காருக பத்தியாக்கினியும், பிதிர்காரியங்களில் தக்ஷிணாக்கினியும், தேவகாரியங்களில் ஆகவனீயாக்கியும் பூசிக்கப்படத்தக்கன என்று பூர்வகாரணத்திற் கூறப்பட்டிருக்கிறது.

சிவசத்தியிலிருந்து சிவாக்கினி தோன்றியது. சிவாக்கினியின் ஆயிரத்தொரு கூறுகக் காருகபத்தியாக்கினி தோன்றியது. அதன் ஆயிரத்தொரு கூறுகத் தக்ஷிணுக்கினி தோன்றியது. அதன் ஆயிரத்தொரு கூறுக ஆகவனீயாக்கினி உற்பவித்தது இதனுற் சிவாக்கினியே காருகபத்திய முதலிய மூன்று ரூபங்களைப் பொருந்தியதென்பது உணரப்படும். சிவபெருமான் இம்முத்தீவடிவாய் விளங்குகின்றுர் என்பது "முத்தன்காண் முத்தீயுமாயினுன்காண்" என்னும் அப்பமூர்த்திகள் சிரபுரத்தேவாரத்தால் அறிந்துகொள்ளத்தக்கதாம்.

சுபகாரியங்களிலும், பிதிர்காரியங்களிலும், தேவகாரியங்களிலும் முறையே மூன்றக்கினி வழிபாடும் நடைபெற்றன என்பது

"ஓதிமிக வந்தணர்க ளெரிமூன் றோம்பு
முயர்புகழார் தருமோ மாம்புலியூர்."

எனத் திருநாவுக்கரசு நாயனுரும்,

"ஆங்கெரிமூன் றுமமர்ந்துட னிருந்தவர்கையாலாகுதிவேட்டு
வோங்கியமறையோரோமாம்புலியூர்."

எனத் திருஞானசம்பந்தசுவாமிகளும்,

"எங்குமிருந்தந்தணர் எரிமூன்றவை யோம்புமிடம்."

எனச் சுந்தரமூர்த்திசுவாமிகளும்,

"மூன்றுவகைக்குறித்த முத்தீச் செல்வத்து
இருபிறப்பாளர் பொழுதறிந்து நுவல."

என நக்கீரரும் அ[illegible]ளியவாற்றுன் அறியப்படும்.

## பூசை.

முதனுளிலே அபரான்னத்தில் வரிக்கப்பட்டவர்களாகிய சிராத்தயோக்கியருக்கு எண்ணெய் முதலியவற்றைக்கொடுக்க. கவசத்தால் ஸ்நாநஞ் செய்வித்து, அவர்களுடைய காலை அலம்பி, உள்ளே கொண்டுபோய் விசுவதேவர்களைக் கிழக்கு முகமாகவும், பிதிர்களை வடக்கு முகமாகவும், அதிதியையும் அப்பியாகதரையும் மேற்கு முகமாகவும் இருத்திப் பூசிக்க வேண்டும். (சபிண்டீகரணத்தில் நிமித்தரையும் மேற்குமுக மாகப் பூசிக்கவேண்டும்,) பிதாவையுத்தேசித்துக் கந்தரையும், பிதாமகரை * உத்தேசித்துச் சண்டரையும், † பிரபிதாமகரை உத்தேசித்துக் கணுதீசரையும் பூசிக்க.

அதிதி அப்பியாகதர் சிவசத்திவடிவினர். "அதிதி அப்பியாகதர் இடத்தில் சதாசிவராகிய விட்டுணுவைப் பூசிக்க" என்று காரணாகமம் செப்புகின்றது.

பூசை செய்யுமிடத்து அவரவர் பெயரால் ஆவாகனமும், வாமதேயத்தால் தாபன சந்நிதான சந்நிரோதமும் செய்க. வாமதேவத்தால் இரக்ஷை செய்க. விசுவதேவருக்கு நெல்லைக் கொண்டு பிரதக்ஷிணமாகச் செய்க. பிதிர்களுக்கு எள்ளைக் கொண்டு அப்பிரதக்ஷிணமாகச் செய்க அகோரத்தால் விசுவ தேவர்களுக்கு பாதம் முதல் சிரசுவரை நெல் தூவுக. பிதிர் கட்கு சிரம் முதல் பாதம்வரை எள்ளுத்தூவுக.

அப்பியங்கம் கவசத்தாற் செய்க. வஸ்திரத்தை இருதயத்தாலும் உத்தரீயத்தை ஈசானத்தாலுங் கொடுக்க. உபவீதத்தைத் தற்புருஷத்தாலும், சந்தனத்தை அகோரத்தா

* பிதாமகர் - பிதாவின் தகப்பன்.
† பிரபிதாமகர் - பிதாமகரின் தகப்பன்.

லும், புஷ்பத்தை சத்தியோசாதத்தாலும் கொடுக்க. பாத்தியத்தை இருதயத்தாலும், ஆசமனத்தை ஈசானத்தாலும், அருக்கியத்தை மூலத்தாலும் கொடுக்க * இடத்தைக் கோமயத்தாற் சுத்திசெய்க. விசுவதேவருக்குச் சதுரமாகவும், பிதிர்களுக்கு விருத்தமாகவுஞ் சுத்திசெய்க. வாழையிலையை இடத்தில் நுனி பொருந்தப் போட்டுப் புரோக்ஷித்து, அன்னம், லவணம், நெய், பால், தயிர், தேன், கறி முதலிய பொருட்களை வைத்து, அஸ்திரத்தாற் புரோக்ஷித்து ஈசானத்தாற் பரிஷேசனஞ் செய்து, மூலமந்திரத்தை உபசரித்து, அபிமந்திரித்துத் தத்தஞ்செய்க. போசனமானபின் திருப்தி பெற்று விகிரமிடுக. உச்சிட்டம் மாற்றுக.

புரோக்ஷணம் - தெளித்தல். பரிஷேசனம் - சுற்றுதல்.

ஆமசிராத்தத்தில் அப்பியங்கம் ஸ்நானம் முதலியவைகளை அவ்வவற்றுக்குரிய மந்திரங்களைச் சொல்லி அவ்வப் பொருட்களைக் கொடுத்துப் பாவனையாகச் செய்க. அரிசியிட்டுத் திருப்தி கேட்க.

## பிண்டம்.

அன்னசிராத்தஞ் செய்வோர் அன்னம், திலம், பானீயம், தயிர், பால், நெய், தேன், வாழைப்பழம் என்னும் பொருட்களைச் சேர்த்து, கந்தர் சண்டர் கணநீசர் என்னும் மந்திரங்களால் சுவதாந்தமாக பிதா பிதாமகர் பிரபிதாமகர் மூவரையு முத்தேசித்துப் பிண்டமிடுக; மாதாவுக்காயின், மாதா பிதாமகி பிரபிதாமகி இவர்களுக்குப் பிண்டமிடுக.

ஆமசிராத்தஞ்செய்வோர் எள்ளு, தண்டுலம், உழுந்து, தயிர், பால், தேன், வாழைப்பழம், நெய் என்னும் பொருள்

* சுத்திபண்ணுக் ... தானத்திற் சோற்றினிரதங்கொண்டு தூய்க்கும் பிசாசாதி ... ழ்ந்து.

களைச் சேர்த்துப் பிண்டமிடுக இவ்வெட்டுப் பொருள்களும் அட்டாங்க மெனப்படும். அன்னசிராத்தத்தில் ஆமபிண்டமிடுதலும், ஆமசிராத்தத்தில் அன்னபிண்டமிடுதலும் குற்றமாம்.

பிண்டத்தில் பிதிர்தேவருக்கு ஆவாகனுதியான உபசாரங்களைச் செய்து வணங்கி, அவர்களது ஆசீர்வாதத்தைப் பெறுக. பின் விசர்ச்சனஞ்செய்து சமஸ்த பிண்டங்களையும் பசுவுக்குக் கொடுக்க அல்லது நீரிலிடுக.

## தருப்பணம்.

பிதா முதலியோரைக் குறித்துத் தருப்பணஞ் செய்க. பிதிர்பூசை தருப்பணங்களை இடப்புறத்திற் றொங்கும் பூணூல் உடையவனும் இடமுழந்தாளை ஊன்றித் தென் திசையை நோக்கியிருந்து செய்வது முறையாகும். "தென் புலத்தார்க்கு வேண்டுவன செய்வார், தெற்கும் மேற்கும் நோக்கியும் கருமங்களைச் செய்வாராதலின்" என நச்சினார்க்கினியார் தொல்காப்பிய உரைக்கட் கூறியதூஉம் காண்க.

## வேதமோதுதல்.

சிராத்த நடக்கும்போது வேதத்தையும், தேவாரம் திருவாசகம் முதலிய தமிழ் வேதங்களையும், புராணங்களையும், இதிகாசங்களையும், தருமசாஸ்திரங்களையும் படிப்பித்தல் வேண்டும். இது பிதிர்களுக்கு மிகத்திருப்தியாம்.

இறந்தோர்க்கூட்டுமேல்வைதனில்வேதம்புராணமிதிகாசஞ்
சிறந்ததருமநூலினிதிறகேட்பித்திடுதல்சிறப்பாகும்.

—கூர்மபுராணம்.

## தக்ஷிணை.

* சிராத்த முடிவில் குருவுக்கும் மற்றையோருக்கும் தக்ஷிணை கொடுத்து வணங்கி ஆசீர்வாதம் பெறுக. அவர்கள் தக்ஷிணையை ஆன்மா உய்யுந்திறங்கருதி ஏற்கவேண்டும் கொடுப்பவரும் பிதிர்தேவருக்கென்றே கருதிக்கொடுக்க வேண்டும்.

சிராத்த முடிந்தபின்பு சிராத்தமேற்பவர்களை வலமாகப் பின்றொடர்ந்து புறத்தே அனுப்பிவிடுக. சிராத்தஞ் செய்வித்தவராகிய குருவையும் உபசரித்து வலமாகப் பின்றொடர்ந்து அவர் திருமனைக்கு அனுப்புக.

## போசனம்.

சிராத்தஞ்செய்த இடத்தைச் சுத்திசெய்து கால்கைகளைச் சுத்திபண்ணி ஆசமனஞ் செய்துகொண்டு சிவனடியார்களோடும், அதிதிகளோடும், தன் சுற்றத்தார் முதலியவர்களோடுமிருந்து போசனஞ் செய்தல்வேண்டும்.

கலியாணம் தேவர் பிதிர்விழா வேள்வியென்
றைவகை நாளு மிகழா தறஞ்செய்க
வெய்க விருந்திற்கும் கூழ்.

—ஆசாரக்கோவை.

போசனம் பண்ணும்பொழுது செய்யத்தகாதகுற்றங்கள்:- உண்பதற்கிடையில் உப்பையும் நெய்யையும் படைத்தல், போசனத்துக்கு உபயோகமாகாத வார்த்தை பேசல், நாய் பன்றி கோழி காகம் பருந்து கழுகு என்பவைகளையும், புலையர் ஈனசாதியார், விரதபங்கமுடையவர், இருதுமதி என்பவர்களையும் பார்த்தல் முதலியனவாம்.

* சோமசம்பு... 28.

பிதிர் சிராத்தகாலங்களிலே தபோதனருக்கு அமுது செய்வித்தோர் தம்முடைய இருபத்தொரு சுற்றத்தாரையும் நரகின்கட்கிடந்து வருந்தாமலெடுத்துச் சிவசமீபத்திலே யிருப்பர்.

விடுத்துல கமலன்றன்னை விரும்பிய விதுலர்க் கன்னங்
கொடுத்தவ ரன்புகூரப் பிதிர்க்களைக் குறித்த நாளி
லெடுத்தெழு மூன்று சுற்றங் கீழ்க்கிடந்திளையா தென்று
நடத்தொழி வம்பனுட்டி விருத்தியே யிருப்பர் நம்பால்.

—சிவதருமோத்தரம்.

சிவயோகிக்குச் செய்யும் பூசையைச் சிவனும் பிரமாவும் விட்டுணுவும் மற்றுமுள்ள தேவர்களும் பிதிர்களும் தமக் கெனக் கொள்வர்.

சிராத்தகாலங்களிலே அதிதிகளுக்கு அன்னங்கொடுத் தல் பெரும் புண்ணியமாகும். பரமசிவனும், பார்ப்பதி அம்மையும், முருகக்கடவுளும், திருமாலும், பிரமாவும், தருமதேவதையுமாகிய சகலருங்கூடி அதிதி ரூபமாய் வருவ ரென்று அகோரசிவாசார்யபத்ததி வியாக்கியானத்திற் கூறப் பட்டிருக்கிறது. அது,

இனைத்துணைத் தென்பதொன் றில்லை விருந்தின்
துணைத்துணை வேள்விப் பயன்.

என்னும் தேவர் வாக்கானும் உணரப்படும்.

"கொடிக்கினி தூட்டிய திதியரோடிருந் துணவுதுய்ப்போர்."

எனத் திருச்செந்தூர்ப்புராணமும், "சிரா[illegible]த்திலே பிதிரரால் உண்ணப்பட்ட சேஷஅன்னத்தை[illegible] தாரோடு உண்க" என்று காமிகாகமமுஞ் செப்புகி[illegible]

அரசுகொள் கடன்க ளாற்றி மிகுதிகொண் டறங்கள் பேணிப்
பரவருங் கடவுட்போற்றிக் குரவரும் விருந்தும் பண்பின்
விரவிய கிளையுந் தாங்கி விளங்கிய குடிக ளோங்கி
வரைபுரை மாடநீடி மலர்ந்துள பதிக ளெங்கும்.

—பெரியபுராணம்.

தென்புலத்தோர்க்கூட்டினரேவீடடைவரென
மறைகள்தெரித்தவாற்று
லன்பினுடன்தென்புலத்தோர்க்கெல்லீருங்
கடனாற்றியலைநீர்க்கங்கை
மின்பயிலும்புரிசடையவெண்ணீறு
பூத்தொளிரும்பவளக்குன்றின்
பொன்புரையுஞ்சேவடியேபுகலாக
வடைந்தின்பம்பொருந்துவீரே.

—கூர்மபுராணம்

மின்னார் சடையான் றமராய்ந்தவர் வேதச் செல்வர்
தென்னாடர் தெய்வம் விருந்தொக்கல் செறிந்து நட்டோர்
முன்னா மெவர்க்கும் முகில்போல் வரையாம னல்கி
எந்நாளு நோயின் றளகாதிப னென்ன வாழ்ந்தான்.

—திருவிளையாடற்புராணம்.

சிராத்த தீபிகை முற்றுப்பெற்றது,

---

# பதிப்புரை

சிராத்ததீபிகையென்பது சிராத்தமென்னும் அபரக் கிரியையைச் செய்யத்தக்க முறைமைகளை அகோர சிவாசாரியர் பத்ததி முதலிய நூல்களிலிருந்து எடுத்து விளக்குவது. சிராத்தம் என்பது சிரத்தையாகச் செய்வதாம். சிராத்தங்களை திவசம் திதி குருபூசை என்று கூறுப. தாய் தந்தையர் முதலோர் இறந்தபின் அவர்கள் புத்திரர்கள் சிரத்தையோடு சிராத்தம் ஒவ்வொரு வருடமும் செய்யவேண்டியது அவசியம். சிராத்தம் செய்யப் பெறாதவர் நற்கதியடையார்; இதுபற்றியே புத்திரனில்லாதவர் தத்தபுத்திரனை வளர்ப்பது.

எமது தாய் தந்தை முதலிய பெரியோர்களுக்கு யாம் வருடத்திற்கு ஒருமுறை செய்யவேண்டிய நன்றியை இச்சிறுநூல் விளக்குகின்றது.

திருமயிலை,
9-6-59.

சே. வெ. ஜம்புலிங்கம்.

# பிழை திருத்தம்.

## சிறப்புப்பாயிரம்.

| பக்கம். | வரி. | பிழை. | திருத்தம். |
|---|---|---|---|
| 1 | 13 | நெறியிவெர்ழுகி | நெறியிலொழுகி |
| 5 | 6 | அவ்வக்கொள்கை | அவக்கொள்கை |
| | | **கிராந்த நிபிகை.** | |
| 2 | 8 | சிவலோபம் | இலலோபம் |
| 3 | 17 | சஞ்சயனம்வரையினது | சஞ்சயனம்வரையினது ஏகோதிட்டம்வரையி [னது |
| 3 | 19 | செனனத்தின் | செளனத்தின் |
| 5 | 14 | பிரசாதன | பிரச்சாதன |
| ” | 21 | றக்கிணை | றக்கிணை |
| ” | 22 | வில்வால்வான் | வில்வாழ்வான் |
| 7 | 21 | வடுதலாகிய | விடுதலாகிய |
| ” | 22 | கிரியைச் | கிரியையைச் |
| ” | 24 | இடம் | இடபம் |
| 9 | 2 | தேவாகளோடு | தேவர்களோடு |
| ” | 15 | ஊடறுபதிக | ஊடறுப்திக |
| 11 | 12 | தாய்ப்பேண் | தாய்பேண் |
| ” | 18 | நாவனர் | நாயனர் |
| 18 | 1 | துறற் | துறர் |
| 22 | 6 | அக்னிகிகார்யம் | அக்கினிகார்யம் |
| ” | 7 | அகிதி | அதிதி |
| ” | 26 | தென்புன | தென்புன |
| 23 | 25 | துதிகட்குப்பணா | துதிகடருப்பணர் |
| ” | 30 | யோத்தி | யோகத்தி |
| 24 | 8 | வேல | வேல் |
| 25 | 14 | கிரகப் | கிருகப் |
| 26 | 4 | முதகெனும் | முகமெனும் |
| ” | 5 | பிறந்தற்குச் | பிறத்தற்குச் |
| ” | 11 | காண | கர்ண |
| 28 | 2 | பக்கம் | பக்கப் |
| 29 | 4 | னவர் | வைர் |
| ” | 18 | முதன்மூவருர்க்குர் | மூன்மூவர்க்குர் |
| ” | ” | தீர்க்கை | தீக்கை |
| 30 | 3 | டீக்கைகி | டீக்கை |
| 34 | 14 | மிருது | மிருதி |
| 40 | 9 | உபசரித் | உச்சரித் |
| 41 | 24 | வினிதிற | வினிதித் |
| 43 | 4 | சமீபத்திலே | சமீபத்திலேஇருந்தி |

# பிரகடன பத்திரம்

## சம்ஸ்கிருதம்.

| | ரூ. | ச. |
|---|---|---|
| சிவாகமசேகரம் சிவப்பிரதிட்டாவிதி (பிரதம பாகம்) .... .... | 3 | 00 |
| சிவலிங்கப்பிரதிட்டாவிதி (2-ம் பாகம்).... | 10 | 00 |
| பிரணயகலஹவர்ணனம் (கண்டனூர் இராமநாதக்குருக்கள் செய்த தமிழுரை) .... .... | 0 | [illegible] |
| பிராசாதசட்சுலோகி-(சங்கரபண்டிதர் தமிழுரை) .... .... | [illegible] | [illegible] |

## தமிழ்.

| | | |
|---|---|---|
| அநுட்டான அகவலுரை .... | 0 | [illegible] |
| சிவபூசை விதி .... .... | 0 | [illegible] |
| சிவபூசை விளக்கம் .... .... | 3 | 00 |
| முப்பொருள் விளக்கம் .... .... | 1 | 50 |
| பிராசாததீபம் உரை .... .... | 0 | 75 |
| விநாயகபரத்துவம் .... .... | 0 | 60 |
| புவனேசுவரி மகத்துவம் .... .... | 0 | 25 |
| வேதாகம நிரூபணம் (முதற்பாகம்) .... | 1 | 00 |
| ஷை (இரண்டாம் பாகம் | 1 | 00 |
| சைவப்பிரகாசிகை 5-ம் புத்தகம் .... | 1 | 00 |
| ஷை 4-ம் ,, .... | 0 | 60 |
| ஷை 3-ம் ,, .... | 0 | 50 |
| ஷை 2-ம் ,, .... | 0 | 50 |
| ஷை 1-ம் ,, .... | 0 | 30 |
| சிவ-சங்கரபண்டிதர் சரித்திரம் .... | 0 | 50 |
| [illegible] பரிபாலனம் [illegible] ஆறுமாதங்கள்) [illegible] வத்துடன் .... | 2 | 00 |
| [illegible] .... .... | 0 | 75 |